REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER. T'Phone: 805


# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

தாபகர்: நா. பொன்னையா

மலர் 22 | சுன்னாகம், கர மாசி கக 2-3-52 ஞாயிறு (சாத்தி ஆண்டு 53) | இதழ் 33

சாம்பசிவம் அன்ட் கோ.
38 கஸ்தூரியார்வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்



திறமான கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள், மேசை, 'பொக்கெற்' கடிகாரங்கள் விற்பனைக்கிருக்கின்றன

N. SAMBASIVAM & Co.,
38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

★ இளவரசி வர இயலாமற் போனமையாற் பொருட்காட்சியை ஒழுங்கு செய்தவர்கட்கு உற்சாகம் குன்றிவிட்டது என்பது வெட்கப்படவேண்டிய விஷயமாகும்.

# அற்புதமான தேர்தல் விளம்பரம்

## கொழும்புக் காட்சியின் அரசியற் பின்னணி

கொழும்புத் திட்டப் பொருட் காட்சியைப் பற்றிக் கொழும்பிலுள்ள பல பத்திரிகைகள் வானளாவப் புகழுகின்றன. சென்றவாரம் 'ஈழகேசரி' விசேஷ நிருபரும் சிலாகித்து எழுதியிருந்தார். இக் கட்டுரை 'ஈழகேசரி'க்கெனத் திரு. சோம. லெ. இலக்குமணச் செட்டியார் அவர்களால் எழுதப்பட்டது. ப. ர்.



தம்பதிகள்: இது குப்தகால சிற்பம். இச் சிற்ப முறையில் அமைந்த சிற்ப சித்திர வேலைகளைக் கொழும்புக் காட்சியிற் காணலாம்.

இப்போது இலங்கையில் நடைபெறும் மகத்தான வைபவம் கொழும்புப் பொருட்காட்சியேயாகும். ஆசிய நாடுகளில் ஒரு காலத்திலும் இத்தகைய பெரிய வைபவம் ஒழுங்கு செய்யப்பட்டதில்லை.

ஐரோப்பாவில் உள்ள நாடுகள் தொழிற் துறையில் பெரும் முன்னேற்றமடைந்துள்ளன. அங்கே தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற எண்ணிறந்த பொருள்களை ஏனைய நாடுகளுக்கு விற்பனை செய்வதற்காக விளம்பரப்படுத்தும் முறையில் பெரிய வணிகப்பொருட்காட்சிகள் ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றன. 'பிரிட்டிஷ் இண்டஸ்றீஸ் ஃபெயர்' எனப்படும். காட்சிச் சந்தை ஆண்டுதோறும் லண்டன் மாநகரில் மே மாதத்திற் பெருமளவில் நடாத்தப்பட்டு வருவதை ஈழகேசரி வாசகர்கள் அறிந்திருக்கக்கூடும்.

கொழும்பில் நடைபெறுகின்ற பொருட்காட்சிக்கும், வெளி நாடுகளில் நடைபெற்ற பொருட்காட்சிக்கும் சில அடிப்படையான வேறுபாடுகள் உண்டு. வெளி நாட்டார் காட்சிக்குச் செல்லும்போது வணிக மனப்பான்மையுடன் செல்கின்றனர். இங்குள்ள பெரும்பாலான மக்கள் பொழுது போக்கிற்காகவோ அல்லது வேடிக்கை பார்க்கவோ செல்கின்றனர் என்ற சந்தேகம் எனக்குள்ளது. மேலும் மக்களிடையே எதிர்பார்த்த அளவு அன்பு உற்சாகம் காணப்படவில்லை. கொழும்புத் திட்டம் என்பது தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வாழுகின்ற மக்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கான திட்டமாகும். அந்தத் திட்டத்தைப்பற்றிப் பாமர மக்களும் அறிந்து கொள்வதற்காகவே இப்பொருட்காட்சி அமைக்கப்பட்டது. இலங்கை அரசாங்கத்தார் செய்த ஒரு சிறு தவறால் மக்கள் எது முக்கியம் என்பதை மறந்து விட்டார்கள். பொருட்காட்சியின் நோக்கத்தை மறந்து, அதைத் திறந்து வைக்க வருவதாக இருந்த இளவரசியின் வருகையையே பெரிதும் எதிர் பார்த்தார்கள். இதனால் விபரீதமான பலன் ஏற்பட்டது. இளவரசி வர இயலாமற் போனமையாற் பொருட்காட்சியை ஒழுங்கு செய்தவர்கட்கு உற்சாகம் குன்றிவிட்டது என்பது வெட்கப்படவேண்டியவிஷயமாகும்.

### விளக்கம் இல்லை!

இந்தப் பொருட்காட்சியிற் கொழும்புத் திட்டத்தைச் சித்திரித்துக்காட்டும்படங்கள் ஓரிடத்திலும் காணப்படவில்லை. பல்வேறு பிரசுரங்கள் காட்சியைப் பார்க்கச் செல்லுவோருக்கு வழங்கப்படுகின்றன. ஆனால் அவற்றுள் ஒன்றிலேகூடக் கொழும்புத் திட்டத்தை விளக்கும் துண்டுப் பிரசுரம் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. கொழும்புத் திட்டப் பொருட்காட்சி என்பதிலும் கொழும்புப் பொருட்காட்சி எனின் நன்கு பொருந்தும்.

பொருட்காட்சியில் 16 நாடுகள் பங்கு பற்றுகின்றன. கொழும்புத் திட்டத்தால் பாதிக்கப்படுகின்ற பெரிய நாடுகள் மூன்று. இவை யாவன: இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேஷியா. இந்த மூன்று நாடுகளின் காட்சிகளைபற்றி இக் கட்டுரையில் பின்னர் விரிவாகக்கூறுவோம். ஏனைய நாடுகளும் காட்சி மண்டபங்கள் அமைத்திருந்தன. வியற்னும் நாட்டார் அமைத்திருந்த மண்டபத்தின் காட்சிப் பொருளாக இருந்தது அந்நாட்டு அமைச்சர்களின் படங்கள். இவ்வமைச்சர்கட்கு வியற்னுமில் எவ்வித செல்வாக்கும் இல்லையென்பதும் இங்கே கவனிக்கத்தக்கது. இதைப் போலவே மக்களின் மனதில் வேறான கருத்துக்களை உருவாக்குவதற்காகமாலைதீவுகளுக்கு ஒரு மண்டபம் ஒதுக்கப்பட்டிருந்தது. மலாயா, வடபோனியோ, பிரிட்டிஷ் சரவாக், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கான மண்டபங்களைப் பிரிட்டிஷார் அமைத்திருந்தனர். பிரிட்டிஷ் மன்னர் உயிர் நீத்த காரணத்தால் இம் மண்டபங்கள் உயிரற்ற நிலையிற் காணப்பட்டன.

### கனடாக் காட்சி

கனடா நாட்டினரின் மண்டபத்திற் கமத்தொழிலிற் கனடாமக்கள்உபயோகிக்கின்ற மின்சாரக் கருவிகள் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அக்கருவிகள் எவ்வாறு இயங்குகின்றன என்பதை விளக்கிச் சொல்வதற்கு இசைத் தட்டுமூலம் ஒழுங்கு செய்திருந்தனர். அமெரிக்க அரசாங்க மண்டபத்தில் வழக்கம்போல் கோரியா பற்றிய போர்ச் செய்திப் படங்களும் பிரசாரப் படங்களும் காட்டப்பட்டன. வேறு வழியில் அமெரிக்கர் இப் பொருட் காட்சியில் பங்குபற்றவில்லை. கொழும்புத் திட்ட நாடுகளுள் அமெரிக்கா சேர்ந்ததன்று. எனவே காட்சியில் நேரடியாகக் கலந்துகொள்ளும் உரிமை —திருமணச்சடங்கை செய்வதற்கு இருக்கவேண்டிய உறவு தானும்— அமெரிக்கர்களுக்கு இல்லை. சடங்கு சிறப்பாக நடைபெறுவதற்காகச் செலவை ஏற்றுக்கொள்ளுகின்ற நண்பர்போலத்தான் அமெரிக்கர் இக்காட்சியிற் பங்குபற்றியிருக்கின்றனர். அமெரிக்க மண்டபத்தின் அருகே ஒரு சிறு விமானம் நிறுத்தப்பட்டுள்ளது, "பயப்படவேண்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

# கால்நடைகளைக் காப்பாற்றுக!

## மாண்புறு உழவும் வாழ்வும் மாழ்வதா?

"தமிழ் நாட்டிலிருந்து திருவாங்கூர் இராச்சியத்திற்குத் தினசரி நூற்றுக் கணக்கான மாடுகள்........ மனிதர்கள் இறைச்சிக்காக அடித்துக் கொல்லப்படுவதற்கே கொண்டுசெல்லப் படுகின்றன என்பதிற் சந்தேகம் இல்லை."

வடமாகாணத்தில் இருந்து கொழும்பு, கண்டி, மன்னார் போன்ற இடங்களுக்குப் பிரதி மாதமும் நூற்றுக்கணக்கான மாடுகள் கொண்டு செல்லப்படுகின்றன. இம் மாடுகள் இறைச்சிக்காக அடித்துக் கொல்லப்படுகின்றன. இதனைத் தடுத்துக் கால் நடைகளைக் காப்பாற்றுவதற்கான கூட்டம் 9-3-52 ல் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும். தமிழ் நாட்டிலிருந்து திருவாங்கூருக்கும் தினசரி நூற்றுக்கணக்கான மாடுகள் இறைச்சிக்காகக்கொண்டு செல்லப்படுகின்றன. இக்கொடிய செயலைக் கண்டித்து மதுரையிலிருந்து வெளியாகும் தினசரியான தமிழ்நாடு எழுதியிருக்கும் வாசகம் எங்கள் நாட்டுக்கும் பொருத்தமானதாகவே யிருக்கின்றது. ப—ர்.

ஆனால், நாம் இப்போது கருத விரும்புவது இரண்டு விடயங்கள்தான். ஒன்று, இச்செய்தி உண்மையாயின், இவ்வாறு நம் அருந் தமிழ் நாட்டிற் பிறந்த பெருந்திருவான மாடுகளையும், பசுக்களையும் பிறநாட்டினர் கொன்று தம்மூன் பெருக்குதற்காக விற்பது வருந்தத்தக்கது என்பது மட்டுமல்ல; பெரும் பாதகம் என்றும் பகருவோம். இரண்டாவது, தமிழ் நாட்டின் உழவுத் தொழில் தடைப்பட்டுத் தவிக்கும் இந்நாளில் அத்தொழிற்கு இன்றியமையாத அரும் சாதனமாகிய 'கால் நடைகள்' அந்நியரிடையே விற்கப்படுதல் அறிவுப் பஞ்சத்திற்கோர் அறிகுறி என்பது நம் முடிவு. இப்போதுஇவ்விரண்டு கூற்றுக்களையும் மறுப்போர் இத் தமிழ்நாட்டில் இரார் என்பது உறுதி.

"வன்புலால் உண்ணும் மனிதரைக் கண்டு மயங்கியுள்நடுங்கி யாற்றுமல், என்பெலாம் கருக இளைத்தனன்" என்று கண்ணீர்விட்டுக் கதறிப் பதறிய கருணைக் கடலாகிய இராமலிங்கர் தோன்றிய தமிழ்நாட்டிலா; "காணுறு பசுக்கள் கன்றுகளாதிகதறிய போதெலாம் பயந்தேன்; ஏனுறுமாடு முதல் பல மிருகம் இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்; கோணுறு கோழி முதல் பல பறவை கூவுதல் கேட்டுளம் குலைந்தேன்" என்று கூவிக் கூவிக் கூக்குரலிட்ட குணக் குன்றமாகிய வள்ளலார் பிறந்த தமிழ் நாட்டிலா நாம் இத்தகைய பசுக்கொலையாகிய படுகொலைக்கு ஆதரவு கொடுத்து அத்தகைய மாபாதகத்தில் பங்கு கொள்ளுவது? என்று நாம் கேட்கிறோம். இந்த நாட்டிலும், வேறெந்த நாட்டிலும் புனிதத் தன்மைக்கே புகலிடமாகிப் பால்சுரந்தூட்டும் பசுமாடுகளைக் கொல்லுதல் என்பதைச் சொல்லுதலும் பாவம்; அவற்றின் ஊனை உண்பவரோ அண்ணுதல் செய்யாத அளறுவாய்க் குடிபுகுவர் என்பதும் உறுதி. மாமதுரைச் சொக்கருக்கு மாண்புமிகும் ஊர்தியாகவும், தேமதுரச் செந்நெல் வயல் உழுவதற்கு உறுதியாகவும் உதவக் கூடிய காளை மாடுகளைப் பற்றியும் அதேதான் நம் கருத்து. கன்றுகளைக் கூடக் கொன்று வாழ நினைப்பவரை என் என்று சொல்வதென்றே விளங்கவில்லை! எந்த நாட்டினரது மறவேட்கையின் பயனாகவும், ஊன் பசியின் காரணமாகவும் இத்தகைய மாபாதகம் விளைந்த போதிலும், அன்பே கடவுளென அரும் பறைசாற்றி வரும் தமிழ் நாட்டினராவது இந்த வளம் பெருக்கும் உயிர்களை வதைக்கத் துணைபுரிதலும் வேண்டா; அவைகளைக் கொன்ற குருதிக் கறைபட்ட வெள்ளிக்காகத் தம் குலத்தை இழிவாக்கவும் வேண்டா.

நாடோறும் காட்டிலுள்ள மரங்களையெல்லாம் வெட்ட விட்டுப் பின்னர் ஊர்தோறும் மரநாட்டு விழா நிகழ்த்தும் அறிவுக் குறைவு, மாடு முதலிய 'கால்நடை' விடயத்திலும் நம் நாட்டிடை ஏற்படுதல் எளிதாகி விடுமோ என நாமும் அஞ்சுகிறோம். நம் கையிலுள்ள மாடுகளைப் பிறர் பையிலுள்ள பணத்திற்காக விற்றுவிட்டுப் பின்னர் நம் செய்

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

— உழையுங்கள்: —
மாதம் ரூ. 100/-தொடங்கி 300/-வரை முதலீடின்றி
உழையுங்கள்
விபரங்கள்:
இனமாக அனுப்பப்படும்
GIRSON KNITTING WORKS, LUDHIANA.
[4549-iv]

# சர்வோதயகாணிக்கை

## குரும்பசிட்டியிற் பேராதரவு

அகில இலங்கைக் காந்திய சேவா சங்கச் செயலாளர் திரு. சி. க. வேலாயுதபிள்ளை எழுதுவதாவது:

சர்வோதய ஆஸ்ரம நிதிக்காக சர்வோதய காணிக்கை சேகரிக்கும் முயற்சி இரண்டாவதாகக் குரும்பசிட்டி என்ற கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அகில இலங்கைக் காந்திய சேவா சங்க அங்கத்தவரும் குரும்பசிட்டி வாசருமாகிய ஊழியர் மூ. பொன்னையா அவர்கள் எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்தார்கள். 3 தினங்களுக்கு முன்னரே துண்டுப்பிரசுரங்களை அச்சிட்டு ஒவ்வொரு வீடுகளுக்கும் முன்னறிவிப்புக் கொடுத்து வைத்திருந்தார்கள். நாம் 15-2-52 மாலையிலே கால்நடையாகக் குரும்பசிட்டியைச் சென்றடைந்தோம். மறுநாள் அதிகாலை ஸ்நானம் பிரார்த்தனைகளை முடித்துக்கொண்டு காணிக்கை சேர்க்கத் தொடங்கினோம். அங்குள்ளவர்கள் தங்களால் இயன்ற காணிக்கைகளை முகமலர்ச்சியுடன் அளித்தனர்.

சர்வோதய காணிக்கை சம்பந்தமான துண்டுப் பிரசுரத்தில் "காசியதரிசி மணி ஓசையின் பின்னே வருவார்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. காணிக்கை சேர்க்கப்பட்ட 3 தினங்களிலும் மணி ஓசை கேட்டவுடன் வீடுகளில் உள்ளவர்கள் ஓடிவந்து படலையில் எங்களை வரவேற்கும் நிகழ்ச்சி மிகுந்த உற்சாகமாக இருந்தது. பல அன்பர்கள் 'யானை எங்கே' என்று வேடிக்கையாகவுங் கேட்டார்கள்.

குரும்பசிட்டிக் கிராமத்தில் 3 நாட்களிலும் 21 மணித்தியாலம் 30 நிமிஷம் வேலைசெய்து 290 வீடுகளுக்குப் போனபோது 51 வீடுகளில் ஆட்களில்லை. 76 வீடுகளில் பணம் தர வசதியில்லை. 163 வீடுகளில் ஒரு சதம் தொடக்கம் 5 ரூபா வரை காணிக்கையாகக் கொடுத்து மொத்தமாக 101 ரூபாய் 29 சதம் குரும்பசிட்டியில் சர்வோதய காணிக்கையாகச் சேர்ந்தது. இக் கிராமத்தின் சனத் தொகை 1600; மாணவர்கள் 400. இக் கிராமத்தில் மகாதேவ வித்தியாசாலை ஒன்றுமட்டும்உண்டு. இங்கு 200 மாணவர்கள் வரையிற் படிக்கின்றார்கள். இப் பாடசாலையில் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் இட முண்டு என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. 100 மாணவர்கள் வரையில் வெளியூர்களில் படிக்கின்றார்கள். ஏறக்குறைய

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

# வண்டிச் சவாரிப் போட்டி

## மாடுகள் நாட்டின் செல்வம்

சுதந்திரதின மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி விழா, சுன்னாகம் புத்தூர் ரோட்டிலுள்ள மாடு பழக்கும் மைதானத்தில் மல்லாகம் நீதிபதி திரு. ஸி. பி. வல்கம்பாயா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது யாழ்ப்பாணம் வடபகுதி உதவிப் பொலிஸ் தலைவர், பொலிஸ் பரிசோதகர்கள், அநேக பொலிஸ் உத்தியோகத்தர்கள், பல கிராமத் தலைமைக்காரர்களும் பங்குபற்றி இவ்வைபவத்தைச் சிறப்பாக நடத்தி வைத்தனர். ஏறக்குறைய இருபதினாயிரம் மக்கள் சமூகமளித்துப் பந்தயக் காட்சியைக் கண்டுகளித்தனர். போட்டியில் வெற்றியடைந்த மாடுகளின் சொந்தக்காரருக்குப் பரிசுகள் அளிக்கப்பட்டன.

பரிசு வழங்குமுன்னர் வலிவடக்குக் காரியாதிகாரி திரு. ரீ. பாலச்சந்திரனவர்கள் பேசும்போது இவ்வைபவம் என் பின்போடப்பட்டதென்பதற்குக் காரணங் கூறியதுடன் இவ்வைபவத்தின் அவசியத்தையும் எடுத்துரைத்துத் தலைவர் முதற்கொண்டு யாவரையும் வரவேற்றனர்.

வழக்கறிஞர் ஆர். என். சிவப்பிரகாசம் அவர்கள் விழாவின் பெருமையை எடுத்துரைத்தனர். வண்டிமாடுகள் வளர்த்தல், அவைகளைப் பழக்குதல் என்பன நாட்டின் பொருளாதார விருத்திக்கு இன்றியமையாதனவென்று எடுத்துக் காட்டினர். இக்காலத்தில் அநேகர் தங்கள் மாடுகளை இறைச்சிக்கு விற்பதால் மாடுகள் தொகை குன்றி வருவதாகவுங் குறிப்பிட்டனர். வருடா வருடம் இப்போட்டி நிகழ்ந்து வரின் வேலைசெய்யும் நல்லமாடுகளின் விருத்தி கூடிக்கொண்டுவருமென்றனர்.

விழாவுக்குத் தலைமை வகித்த நீதிபதி அவர்கள் பேசும்போது சவாரிப்போட்டியினால் பெருநன்மை உண்டென்றும், வருடத்துக்கு ஒரு முறையன்று இருமுறை இப்போட்டி நடத்தப்படவேண்டுமென்றுங்குறிப்பிட்டனர்.

நீதிபதி பின்வருவோர்க்குப் பரிசுகள் வழங்கினர்.

### முதலாவது பரிசு

அளவெட்டி திரு. வீ. நாகமணி. பரிசு உபகரித்தவர்கள்—காங்கேயந்துறை திருவாளர்கள் கிருபாமூர்த்தி அவர்களும் கனகசபையவர்களும்.

### இரண்டாம் பரிசு

ஊரெழு பிரமஸ்ரீ எஸ். தங்கசாமி ஐயர். பரிசு உபகரித்தவர்—சுன்னாகம் ஷெல் கொம்பனி மனேச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள்.

### மூன்றாவது பரிசு

அளவெட்டி திரு. இ. கந்தையா பரிசு உபகரித்தவர்—சுன்னாகம் பிரபல வியாபாரியார் திரு. பி. கே. தாமோதரம்பிள்ளை அவர்கள்.

### நான்காவது பரிசு

சுன்னாகம் திரு. ந. அப்பையா. பரிசு உபகரித்தவர்—மலாய்நாட்டுப்பென்ஷனர் உடுவில் திரு. என். கே. துரையப்பா அவர்கள்.

### ஐந்தாவது பரிசு

அச்செழு திரு. கிருஷ்ண பிள்ளை. பரிசு உபகரித்தவர்—தெல்லிப்பழை பிரபல வியாபாரியார் திரு. எஸ். இரங்கநாதன் அவர்கள்.

### ஆறாவது பரிசு

அச்செழு திரு. எஸ். செல்லையா. பரிசு உபகரித்தவர்—மாவிட்டபுரம் கிராம முன்னேற்றச்சங்கத்தினர். கடைசியாகப் போட்டிக்கிண்ணம் முதலாவது பரிசு பெற்ற அளவெட்டி திரு. வீ. நாகமணிக்கு வழங்கப்பட்டது.

வழக்கறிஞர் திரு. த. தம்பிரத்தினம் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினர். அத்துடன் அவ்வைபவம் இனிது நிறைவேற அரிதுதுணைபுரிந்த பொலீசாரையும் பாராட்டினர்.


சகல பயிர்களுக்கு

C C C பசளைகள்

இலங்கையின் பசளை வியாபாரத்தில்
40 வருடகால அனுபவத்தின் பயனாக

நாங்கள்

C C C

கலவைப்பசளைகளை

தரக்கூடியவர்களாக இருக்கிறோம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசிலனை செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் C C C கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி,
லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

The
Colombo
Commercial
Company,
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

தந்தி: COSSACK. தபாற்பெட்டி இல. 33. பேசுந்தந்தி இல. 5351.

[4538]

★ மற்றெல்லா இலக்கிய வகையிலும் பார்க்கப் பரந்த கருத்தைச் சுருங்கிய சொற்களில் அடக்கி வைத்திருக்குந் தன்மை பழமொழிகளுக்கே யுண்டு.

# பழமொழி இலக்கியம்*

## பண்பாட்டைவிளக்கும்எழுதாமறை

**க. இ. சரவணமுத்து**

**வாழ்க்கையைப் பிரதி** பலிப்பது இலக்கியம். உயிருள்ள இலக்கியம் என்றால் அவ்வாறு தான் இருக்கும்; இருக்கவும் வேண்டும்.

இலக்கியத்தில் ஒருவகை கிராம இலக்கியம், கிராமக் கவிதைகள், உப கதைகள், நொடிகள் போலவே பழமொழிகளும் அவ்வினத்துள் அடங்கும். பொதுசன வழக்கிற் பயின்றுவருந் தன்மையைக் கவனிக்கும்போது, பழமொழிகளே அதிகம் செல்வாக்குள்ள கிராம இலக்கியங்கள் என்று சொல்லத்தோன்றும்.

மற்றெல்லா இலக்கிய வகையிலும் பார்க்கப் பரந்த கருத்தைச் சுருங்கிய சொற்களில் அடக்கி வைத்திருக்குந் தன்மை பழமொழிகளுக்கேயுண்டு. பழமொழிகளெல்லாம் அனுபவஉண்மைகளை—நீதிகளை—எடுத்துக்காட்டுவனவாக அமைந்திருக்கும். பழமொழிகளின் மூலமாக ஒரு நாட்டின் பண்பாட்டை — மக்களின் மனவியல்புகளை நன்கு இரிக்க முடியும். இவ்வகையில் அவை சரித்திரமாகக் கூடக் கருதப்படலாம்

பேச்சுவழக்கிலேதான் பழமொழிகள் சர்வசாதாரணமாகக் கலந்துவரும். சொலலும் பொருளைச் சிறக்கச் செய்வதற்காகச் செய்யுள் வழக்கில் இலைமறைகாய் போல அவற்றைக் கலந்துரைப்பது புலவர் இயல்பு.

**எழுதாமறை**

காலதேச வர்த்தமானங்களுக்கேற்பப் பழமொழிகள் கருத்திலும், உருவத்திலும் வேறுபடும். என்றாலும் அவை அறிவுறுத்தும் நீதிகள் பொதுவாக மனிதகுலம் முழுவதற்குமே பயன்படும் ஆற்றல் உள்ளவை என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

சேற்றிலே தாமரை முளைக்கிறது. சிற்பிக்குள் முத்துப் பிறக்கிறது. ஏழைப் பட்டிக் காட்டுப் பாமரசனங்களிடத்திலேதான் 'எழுதாமறை'களான நல்ல கிராம இலக்கியங்கள் தோன்றுகின்றன. அவைகளே அவர்களின் கலைப்பாற்றிகள்; வழி காட்டிகள். இந்தக் கர்ணபரம்பரைச் செல்வங்கள் காலப்போக்கிலே மங்கி மறைந்துவிடக்கூடியவை. அவற்றைத் தேடித் தொகுக்க வேண்டும் என்ற கிளர்ச்சி பல பாஷையாளரிடத்தும் உரம் பெற்றுவருவது போலத் தமிழரிடத்தும் வளர்ந்துவருகிறது.

தமிழ் நாட்டில் எத்தனை கிராமங்கள் உண்டோ அத்தனை ஆயிரமாயிரம் பழமொழிகளை அங்கு திரட்டலாம். மனிதனைப்பற்றி மட்டுமன்றி. யானை, பூனை, நாய், நரி, காகம், பருந்து, பாம்பு, பல்லி, கடுகு, உப்பு — முதலிய பொருள்களைப் பற்றி யெல்லாம் பற்பல தினுசாக வழங்கும் பழமொழிகளை ஒப்பிட்டுப் பார்த்தால், அந்தப் பட்டிக்காட்டுத் தமிழரின் சிந்தனைத் திறத்தையும், அனுபவத் தெளிவையும் வியக்கத்தோன்றும்.

தமிழிலுள்ள பழமொழி (இலக்கிய)ச் செல்வங்களை இரு வகையாக அணுகவேண்டியிருக்கிறது. பழமொழி நானூறு முதலிய நூல்களிற் கலந்துள்ள — அதாவது செய்யுள் வழக்கில் இடம் பெற்ற—பழமொழிகள் ஒரு

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

* இலங்கை வானொலியில் 16-2.52.ல் பேசியது.

## மனிதனும் கடலும்*

— புதுவை, சுப்பிரமணியன் —

கட்டிலா மனித னே! நீ
கடலினைப் போற்று வாயே!
அட்டியில் லாது சொன்னேன்!
அஃதுனைக் காட்டும் ஆடி!
மட்டிலா வாழங் கொண்ட
மனக்கடல் கொண்டோய்! எல்லை
கட்டலில் திரைகள் தோன்றும்
கடலில்நின் ஆன்மா காண்பாய்!

உனக்குளே மூழ்கி உன்றன்
உருவுகண் டுவகை எய்திப்
புனல்தவழ் கண்ணுற் கையால்
புணையெனத் தழுவிக் கொள்வாய்!
நினைவலை யெல்லாம் நீங்கி
நின்மனம் ஆங்கெ மூம்பும்
இனைகுரல் ஒன்றைக் கேட்டே
இயங்குதல் மறந்து நிற்கும்!

மனிதனின் மனவா ழத்தை
மற்றிங்கு யாரே கண்டார்?
கனைகடல் செல்வம் எல்லாம்
கண்டவர் யாரே? நீவிர்
இனையரென் றியம்ப வொண்ணு
இருளெனப் புதிரா யுள்ளீர்!
மனிதனே! கடலே! நும்மை
மறைத்தலில் தருக்கும் ஏனோ?

ஆயினும் அளவில் ஆண்டாய்
அடுதலே தொழிலாய்க் கொண்டீர்!
ஓயுதல் இன்றி உள்ளம்
உருக்கிடும் இரக்க மின்றி
ஆயநல் ஆர்வத் தோடே
அழிவிலே நாட்டங் கொண்டீர்!
தோயுமோர் அமைதி யில்லாச்
சோதரர்! பொருதே வாழ்வீர்!

* சார்ள்ஸ் போத்ளேர் (Charles Baudelaire) என்ற பிரெஞ்சுக் கவி எழுதிய " L' homme et la mer" என்ற கவிதையைத் தழுவியது.

## சுற்றியலையும் உள்ளம்

### ஸ்ரீ ராமக்கிருஷ்ண பரமஹம்சர் அருள்மொழி

உலகின் பல பாகங்களிலும் குருதேவரான பரமஹம்சரின் ஜயந்திவிழா கொண்டாடப்படுகின்றது. இத்தினத்தை முன்னிட்டு திரு.த. யோகநாதன் **எழுதுவதாவது:**

**ஸ்ரீ**ராமக்கிருஷ்ண பரமஹம்சர் தோன்றியகாலம் இந்தியா அடிமை நாடாக அன்னியராட்சியில் அமிழ்ந்திக் கிடந்த காலம். தத்தம் கலாச்சாரம், பண்பாடு முதலியவற்றை மறந்திருந்த காலம். படித்தவர்கள் என்று சொல்லப்பட்ட எத்தனையோ பேர் ஆங்கிலேயரின் உடை நடை பாவனைகளை உவந்தேற்றுச் சுகித்திருந்த காலம். இந்து சமயம் வளர்ச்சியின்றி, கவனிப்பாரின்றி, சமையத்திற்கேற்ற சமயமாக உருமாறிக் கிடந்தகாலம். இந்த அபாயமான நிலையிற்றான் பரமஹம்சர் தோன்றினர். கற்றறிந்த பேரறிவாளர்களைத் தன்னகத்தடக்கின்ற வங்காளத்துக்கு ஓர் ஒளிவிளக்காகப் பரமஹம்சர் விளங்கினர். பாரதநாட்டுக்கு ஒப்பில்லாத ஓர் ஆத்மஜோதியாகப் பிரகாசித்தார். இவர் தந்த அருள் மொழிகள் யாவும் அழியாத இன்பப் பொக்கிஷங்கள். ஸ்ரீராமக்கிருஷ்ணர் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்கவில்லை. கற்கவேண்டுமென்ற ஆசையும் அவருக்கேற்படவில்லை. சிறு வயதிலேயே தெய்வக் குழந்தையாகத் திகழ்ந்தார். இவரது வாழ்க்கையின் விசித்திரம் சமயம் குன்றிய பாரத நாட்டிற்குப் புதிராகவே இருந்தது. இவரது செய்கைகளையெல்லாம் எள்ளிநகையாடியவர்கள் இவரைப் பித்தரென்றனர். நாளாவட்டத்தில் யாரைப் பித்தனென்று கருதினார்களோ அவரையே ஒப்பற்ற மகானென்று கைகூப்பி வணங்கினார்கள். சாதாரண மனிதன் என்று யாரை எள்ளி நகையாடினார்களோ அவரையே தெய்வமனிதர் என்று ஒப்புக்கொண்டனர்.

பரமஹம்சர் ஒரு புனித மார்க்கத்தைச் சிருஷ்டித்தார். இவர் புத்தரின் போதனையைத் துச்சமாகக் கருதவில்லை. இயேசு, முகம்மது நபி என்பவர்களின் அறிவுரைகளை உதறித்தள்ளவில்லை. அவர் இதயத்தில் அன்னாரின் பொன்மொழிகள் இடம் பெற்றிருந்தன. பரமஹம்சரின் உண்மையான தெய்வப் பண்புக்கு விளக்கம் தந்தார் சுவாமி விவேகானந்தர். இப்பெருந்தகை குருதேவர் காட்டிய வழியைப் பின்பற்றிப் பாரத நாட்டை நலம்பெற விளங்கச் செய்தார். அமெரிக்காவுக்கு இந்து மதத்தின் மாண்பை எடுத்துரைத்தார். இராஜாஜி அவர்கள் தாம் எழுதிய **ராமக்கிருஷ்ண உபநிடதம்** என்ற நூலிற் பரமஹம்சரின் உவமானங்கள் பல எடுத்தாண்டுள்ளார். அவை ஆழமானவை.

"பட்டணத்துக்கு ஒருவன் வந்து இறங்கியதும் முதலில் ஒரு இடம் தேடி மூட்டை முடிச்சுகளை வைத்துவிட்டுப் பிறகு ஊர்பார்க்கப்போகிறான். பகலெல்லாம் சுற்றித் திரிந்துவிட்டு இரவு வந்ததும் தான் ஏற்படுத்திக் கொண்ட விடுதிக்குப்போய்ப் படுக்கிறான். இப்படி முன்னாலே தங்குவதற்கு ஒரு இடம் ஏற்படுத்திக் கொண்டிரா விட்டால் பகலெல்லாம் வேடிக்கையாகக் கழித்துவிட்டு இரவில் தங்க இடமின்றி மிகவும் கஷ்டப்படுவான். உலகமெல்லாம் சுற்றியலையும் உள்ளத்திற்கு ஒரு தங்குமிடம் கடவுள். அந்த விடுதியைப் பத்திரப் படுத்திக் கொள்வது க்ஷேமம். இல்லாவிடில் சந்தோஷமும் அமைதியும் கெட்டுத் துக்கப்படுவோம். மகனே! வாழ்க்கையின் சந்தோஷம் முடிந்து அந்தகாரம் மூடிக் கொள்ளும் காலம் வரும். அப்போது நிம்மதியைக் காண ஒரு புகலிடம் வேண்டும். கடவுளாகிய விடுதியின் அவசியத்தை உணர்வோமாக"

இத்தகைய எத்தனையோ அருள்மொழிகள் ஜீவனுள்ளனவாக ஒளிவீசுகின்றன. அவற்றைப் படித்து நமதுவாழ்க்கையைவளம்படுத்துவோமாக!

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!

**இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும்**

★

முதலாம் பாகம்

**இலங்கைச் சரித்திரம்**

விலை ரூபாய் 3-00

திரு. எஸ். எவ். டி சில்வா அவர்கள்
சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர (S.S.C.)
வகுப்புக்கென எழுதிய நூலின் தமிழாக்கம்.

★

இரண்டாம் பாகம்

**உலக சரித்திரம்**

விரைவில் வெளிவரும்.

ஸ்ரீலங்கா பப்ளிஷிங் கொம்பனி,
[4548—iii] 111, டாம் வீதி ::: கொழும்பு

புத்தகங்கள், பத்திரிகைகள், விற்பனையாளர்கள்.
**தமிழ்ப்பண்ணை**
யாழ்ப்பாணம். இலங்கை.

1930

ஈழகேசரி

சுன்னாகம், கர௵ மாசி ௧௯

— காந்தி ஆண்டு 83 —

பேசும் தந்தி இல. 805

## நற்காலம் உதிக்குமா?

**ஈழைத் தேச வைத்திய** முறையாகும் ஆயுள்வேதம் அபிவிருத்தி அடைய வேண்டுமென்பதை எவரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். என்றாலும் இவ்வைத்திய முறையை விரும்பியபடி உயர்நிலையில் வைக்கவேண்டிய முயற்சிகள் அரசினரால் போதிய அளவுக்குக் கையாளப்படவில்லை. இவ்வைத்திய முறையின் திறமையையும் தேவையையும் அரசினர் நன்குணர்ந்தும் அதை நாட்டில் நன்கு பயன்படுத்த ஏற்ற வழிகளை இன்னும் மேற்கொண்டாரில்லை. ஆங்கில வைத்தியத்துக்கு அளிக்கப்பட்டுவரும் அந்தஸ்தும் உரிமையும் ஓரளவுக்காயினும் ஆயுள்வேதத்திற்கு அளிக்கப்பட்டிருப்பின் இவ்வைத்திய முறை இப்போதைய பரிதாப நிலையில் இருந்து ஈடாட்டமடைய வேண்டியதில்லை.

ஆயுள்வேத வைத்தியர் தமது கடமையைச் சரிவரச் செய்யவில்லை. இவ்வைத்தியத்தை விருத்திசெய்யவில்லையே யென்று சில உத்தியோகத்தர்கள் கூறுகின்றனர். அரசினர் உதவி போதியதாகப் பெறாது வைத்தியர்கள் மாத்திரம் இந்த அரிய செயலைச் செய்து முடிப்பது எப்படி? இந்தியாவில் இவ்வைத்திய முறையை நன்கு பெலமடையச் செய்ய அத்தேச அரசினரும் பொதுமக்களும் காட்டிவரும் ஊக்கமும் அபிமானமும் பெரிதும் புகழ்ந்து பாராட்டப்பட வேண்டியன. அங்கு பல்கலைக் கழகங்களிற் கூட ஆயுள்வேத வைத்தியம் பாடமாகக் கற்பிக்கப்படுகின்றது. அன்றியும் ஊர்கள் தோறும் ஆயுள்வேத வைத்தியசாலைகளை நிறுவி ஏற்ற வைத்தியர்களையே அதனை நடத்த வைக்கின்றனர். அப்படியாக இலங்கையரசினர் ஏன் செய்யக் கூடாதென்று கேட்கின்றோம். ஓர் ஆயுள்வேதக் கல்லூரியையும் ஓர் ஆயுள்வேத வைத்தியசாலையையும் நடத்திவரின் ஆயுள்வேத வைத்தியம் விருத்தியடைந்து விடுமா? என்று கேட்கின்றோம். இப்போதிருக்கும் ஆயுள்வேதக் கல்லூரி பெரிதும் திருத்தியமைக்கப்பட வேண்டும்.

இப்போது அரசினர் உத்தியோகப்பற்றில்லாத ஒருவரை ஆயுள்வேதப் பகுதியைத் தலைமைவகித்து நடத்த நியமித்துள்ளார். இவர் சிறந்தவோர் ஆயுள்வேத வைத்தியராக விருப்பதும் போற்றப்பட வேண்டிய விஷயம். இவ்வைத்திய விருத்தி இனிச் சிறந்த முறையிற் பரிபாலிக்கப்படுமென்று நம்புகின்றோம். வேண்டிய வேண்டிய திருத்தங்களையும் மாற்றங்களையும் ஏற்படுத்தி இவ்வைத்தியப் பகுதி நாட்டுப் பொதுமக்கட்கு நன்கு பயன்படச் செய்வதே நோக்கமாக வேண்டும். பேச்சளவில் மக்களை வசப்படுத்துவதற்கு மாத்திரம் இவ்வைத்தியத்தை ஆதரிக்கும் அரசியல்வாதிகள் பலருளர். ஆனால் உண்மையில் ஆயுள்வேதத்தை அந்தரங்கத்தில் இவர்கள் வெறுத்துப் புறக்கணிப்பவர்கள். இந்தப் போலி நடிப்புக்காரர் கையில் ஆயுள்வேதம் அகப்படாது தப்பிக்கொண்டாற்றான் அதற்கு மீட்சியுண்டு. உள்ளும் புறமும் விசுவாசத்துடன் ஆயுள்வேதத்தை நன்கு மதிக்குந் தேசத்தலைவர்களே இவ்வைத்திய முறையை நன்கு சன்மானித்து விருத்திசெய்ய வல்லார் என்போம்.

இவ்வைத்திய முறையைச் சீர்ப்படுத்த எழுந்த விசாரணைச் சபையினரின் சிபார்சுகள் இன்னும் முற்றாகக் கையாளப்படவில்லை. இவ்வைத்தியத்தை நன்கறியாத எத்தனையோ ஏமாற்றுக்காரர்கள் நாட்டின் பல பாகங்களிலுங் காணப்படுகின்றனர். அரசினர் இவ்வைத்தியர்களை ஆராய்ந்து பதிவு செய்து உத்தரவளிப்பாராயின் போலி வைத்தியர்களுக்கு இடமிராது. அப்போதுதான் மக்கட்கு இவ்வைத்தியத்தில் நம்பிக்கையும் அபிமானமும் உண்டாகும். நாட்டுமக்களில் அநேகர் இன்றும் பொதுவாக இவ்வைத்தியத்தையே தமது உயிர்நாடியாகக் கருதிவருகின்றனர். எனவே இவ்வைத்தியத்தை அரசினர் விருத்தியடையச் செய்து நன்னிலையில் வைத்தாற்றான் தேசமக்கள் ஆரோக்கிய வாழ்வை அடைவர். ஆகவே அரசினர் காலதாமதஞ் செய்யாது இவ்வைத்திய முறையை உயரிய முறையிற் சீராக்க வேண்டிய வழிவகைகளைக் கையாளவேண்டும்.

## கால்நடைகளுக்கு ஆபத்து

### யாழ்ப்பாணத்திற் கூட்டம்

வடமாகாணத்திற் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் இருந்து இறைச்சியின் பொருட்டு பசு, எருது, ஆடு முதலிய கால்நடைகளைப் புகைவண்டி மூலமும் ஏனைய வாகனங்கள் மூலமும் கொழும்பு மன்னார் போன்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்தல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் வடமாகாணப்பகுதியில் உள்ள கமக்காரர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். பண ஆசையால் ஒரு பகுதியினர் கால் நடைகளை விற்பது மாத்திரமல்ல கால்நடைகளை ஒரு கிராமத்திலிருந்து களவாடி மற்றோர் கிராமத்தில் தரகர்கள்மூலம் விற்பனவு செய்வதும் ஒருதொழிலாகிவிட்டது.

இந்தவிதமான கொடிய செயல்களை உடனே தடுப்பதற்கேற்ற வழிவகைகளைக் கையாளுவது பற்றிய ஆலோசனைக் கூட்டமொன்று 9-3-52 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் அகிலஇலங்கைக் காந்திய சேவா சங்கத்தின் ஆதரவில் நடைபெறும். இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு வடமாகாண அதிபர், வடபகுதி கமதொழில் அதிகாரி, உதவிப் பொலிஸ் அதிகாரி, பிரபல கல்லூரி அதிபர்கள், கிராமச்சங்க அங்கத்தினர், பாராளுமன்ற அங்கத்தினர், காரியாதிகாரிகள், செனேட்டர்கள் உட்பட வேறும் பலர் சமூகமளிப்பார்கள் எனத் தெரிகின்றது.

## ஈழத்து ஓரத்தில் — பாட்டைசாரி

கொழும்புப் பொருட்காட்சியில் தமிழரின் கலைச் செல்வங்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதாக அன்பர்கள் பலர் கடிதங்கள் எழுதியிருக்கின்றனர். தமிழரின் கைத்தொழிற்திறன், சிற்ப சித்திர வேலைப்பாடுகள் போன்றவற்றை எடுத்துக் காட்டும் பொருள்கள் காட்சிக்கு வைக்கப்படவில்லையெனப் புகார் கிளம்பியுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து தங்கத்தாற் செய்யப்பட்ட அற்புத நகையொன்று காட்சிக்கு அனுப்பப்பட்டதாம். அதைத்தானும் அங்கு காண முடியவில்லையென விஷயம் அறிந்த பலர் கூறுகின்றனர்.

### தமிழ்க்கலை

சென்ற வருடம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் விழாவின்போது ஏற்படுத்தப்பட்ட கலைக்காட்சியைக் கண்ணுற்றவர்கள் தமிழரின் தலைசிறந்த நாகரிகத்தை ஓரளவுக்குக்கண்டு வியந்தனர். அதிற் சிறு பகுதியையேனும் கொழும்புப் பொருட்காட்சியில் ஒரு மூலையில் வைத்திருந்தால் தமிழரின் பண்பாட்டுக்கு அது சான்று பகர்ந்திருக்கும். எடுத்த எடுப்பிலேயே யூ. என். பி. தமாஷாக அமைந்த கொழும்புக் காட்சி சகல துறைகளிலும் தமிழரை ஒதுக்கிவிடத் திட்டமிட்டதுடன் அதிற் போதிய வெற்றியுங் கண்டிருக்கின்றது. இப்படி யூ. என். பி. தலைதெறிக்க நடக்குமாயின் தமிழரசுக்கட்சியினரின் பிரசாரம் வலுப்பெறுவதில் ஆச்சரியமிராது

### தமிழர் காவடி

கொழும்புக் காட்சியிற் பங்கு பற்றுவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து காவடியாட்டமும் செம்பு நடனமும் சென்றுள்ளன. மட்டக்களப்பிலிருந்து சென்ற ஒரு நடனக்கோஷ்டியும் அங்கு கூத்தாடுகின்றது. தமிழர்களை வெறும் காவடிகளாகக் கருதிவரும் இன்றைய அரசாங்கம் அவர்களை ஆட்டம் போடவும் செய்துவிட்டது. இப்படியே 'சொல்லுவதெல்லாவற்றுக்கும் தமிழர் தாளம் போடுவதாயின்' ஈற்றில் பாதாளம் சென்று பைரவி பாட வேண்டிய கதி ஏற்படலாமல்லவா?

### நஞ்சுண்போர்!

கள்ளுண்பவர் எஞ்ஞான்றும் நஞ்சுண்பவர் என்பது தமிழ் மறை. வவனியாப் பிரதிநிதியின் கருத்தின்படி தமிழரசுக் கட்சியின் அரசியற் கொள்கைகளை அனுட்டிப்பவர்கள் நஞ்சுண்பவாகள் மாத்திரமன்றி அதன்பேறாக உயிருக்கே உலைவைப்பவர்களுமாகின்றனர். ஆகவே, தமிழரசுக் கட்சியினர் கொண்டுள்ள தமிழ் வெறி ஆளையே முடிவெடுத்துவிடும்! தமிழன் கள்ளுண்டு வெறியாடுபவன் என்பதற்கு இலக்கியத்தில் ஆதாரம் இருந்தாலும் தமிழரசுக் கட்சியினரின் வெறி உயிருக்கே ஆபத்தானதாம்.

### கிரகணம் சாட்சி

சோதிடப் பொய் மெய் ஒருபுறமிருக்கக் கிரகணம் தோன்றி மறைவது மெய் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள்; மறைக்கவும் மாட்டார்கள். சென்ற 25 2-52 திங்கட்கிழமை இந்தியாவிற் சில இடங்களிற் சூரியன் கிரகணமடைந்தது. கொக்குவில் இரகுநாத ஐயர் அவர்களின் வாக்கிய பஞ்சாங்கத்தில் 25-2-52 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 3-45 வரையும் யாழ்ப்பாணத்திற் சூரியன் கிரகணமடையுமெனக் கண்டிருந்தது. ஆனால் இங்கு அந்த நேரத்தில் மப்பு மந்தாரந்தானும் இருக்கவில்லை; இப் பூரண சூரிய கிரகணம் இலங்கையிலே தோன்றுதெனத்திருக்கணித பஞ்சாங்கம் எப்பவோ கூறிவிட்டது. திருக்கணிதம் மெய் என்பதற்குக் கிரகணமே சாட்சி.

### அரிசி அருள்வாய்!

சென்னை இராச்சியத்திற் பங்கீட்டு அரிசியை ஆறு அவுன்சிலிருந்து எட்டு அவுன்சாக்கப் படாத பாடு பட்டும் ஒன்றும் வாய்க்கவில்லை. இதையறிந்து பட்டினிப்பாவலர் திருவாய் மலர்ந்து அருளியதைப் படியுங்கள்; பசி கூடப் பறந்துபோம்!

சோறெனவீ எங்கள் உயிர்
 தந்த அவுன்ஸ் ஒன்றே,
சொல் உப்பு மாவெனவீ
 தோன்றும் அவுன்ஸ் ஒன்றே
கூறரிய இட்டலி எனக்
 கொள் அவுன்ஸ் ஒன்றே,
ஆறிவரு கஞ்சி யென
 ஆன அவுன்ஸ் ஒன்றே,
ஆறவுன்ஸ் ஆன பொருள்
 அரிசி யருள் வாயே!

## அற்புதமான தேர்தல்விளம்பரம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டாம் அதில் அணுக்குண்டு இல்லை" என வேடிக்கையாகப் பலர் பேசிக்கொண்டார்கள்.

கொழும்புத் திட்ட நாடுகளுள் ஒன்றான நியூசிலந்து இப்பொருட் காட்சிகளிற் கலந்து கொள்ளவில்லை. ஆஸ்திரேலியர் அழகிய மண்டபம் ஒன்றையும் சினிமாப் படம் காட்டுதற்கான ஓரிடத்தையும் அமைத்திருந்தனர். பால், பழம், தொழிற்கருவிகள் இவற்றின் உற்பத்தியில் ஆஸ்திரேலியா அடைந்துள்ள வளர்ச்சியை அங்கு பார்த்தவர் அனைவரும் வியக்கும்படி அழகாக வரிசைப் படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. ஆஸ்திரேலியக்காட்சியில்கோழிமுட்டைகளை மின்சார உதவியால் 18 தினங்களில் குஞ்சு பொரிக்கச் செய்யும் இயந்திரம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அந்த இயந்திரம் ஆயிரம்முட்டைகளை ஒரேநேரத்தில் தன்னகத்தே கொள்ளக்கூடியது. இந்தியமண்டபத்தின் அமைப்பும் மண்டபத்தின் நடுவே நிறுத்தப்பட்டிருந்த காந்தியடிகளின் சிலை, முன்வாயிலிற் காணப்பட்ட அசோகச் சக்கரம் பொறிக்கப்பட்ட தூண், இந்திய தேசியக் கொடிக்கம்பம் ஆகியவை சிறப்பாக இருந்தன. இந்தியாவிலே ஏராளமான தொழில்கள் தழைத்து ஓங்கி வளர்ந்து வருகின்ற போதிலும், துணி உற்பத்தி, அலுமினியம், பெயின்ற் போன்ற தொழில்கள் மட்டுமே காட்சியில் இடம்பெற்றிருந்தன. இந்திய மண்டபத்தில் மிக விலை உயர்ந்த பொருள் இரத்தினக் கம்பளம்; அதன் மதிப்பு 5 இலட்சம ரூபாயாகும். பல கற்களும், இரத்தினங்களும் அதிற பதிக்கப்பட்டிருந்தன. இக்கம்பளத்திற்குக் காவல்புரிவதற்குப் பொலீசார் இருவர் நியமிக்கப்பட்டிருந்தனர் என்றால் அதன் பெருமையை மேலும் சொல்ல வேண்டுமா? இந்தியத தேயிலைத் தொழிலை விளம்பரப் படுத்தும் வகையில் இந்தியத் தேநீர் விற்கும் ஒரு நிலையமும் அமைக்கப்பட்டிருந்தது. இலங்கையில் இந்தியத் தேநீர் விற்பதற்கான முயற்சியெனச் சிலர் சந்தேகப்பட்டனர். இச் சந்தேகத்திற்கு இடமே இல்லை. கொல்லர் தெருவில் எப்படி ஊசி விற்கமுடியும்?

பாகிஸ்தான் மண்டபத்தில் சுக்கூர் அணைக்கட்டு சிறு வடிவத்தில் கட்டப்பட்டிருந்தது. அந்த நாட்டில் கிடைக்கும் பலவகைப் பஞ்சும், தோலாற் செய்யப்படும் பொருள்கள் பந்தாட்டங்கள் போன்ற விளையாட்டுக்குரியபொருள்கள் எல்லாம் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றைவிட சணலுக்கே கூடியளவானமுக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது.

### இந்தோனேசியா

இந்தோனேசியப் பொருட்காட்சி மண்டபத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஐந்து தூண்களும் அண்ணாந்து பார்க்க வேண்டிய அளவு உயர்ந்திருந்தன. இந்தோனேசியா அரசாங்கத்தின் 5 நோக்கங்களுக்கு அவை அடையாளமாக விளங்கின. சிற்பக் கலைக்காட்சிகளும் அங்கே இருந்தன. சென்றவர்கட்கெல்லாம் மலர்ந்த முகத்தோடு பல புத்தகங்களை வழங்கி மக்களின் நன்மதிப்பைப் பெற்ற மண்டபம் இந்தோனேசியா கலாமண்டபம் ஒன்றுதான்.

பொருத்தமில்லாத முறையிலே இலங்கை அரசாங்கப் பகுதிகள் விளம்பரப்படுத்தப்பட்டிருந்தன. குறைத்துக் கூறுவதைப்போலவே மிகைபடக் கூறுவதும் பெரிய ஓர் குற்றமாகும். சினிமாப் படங்களில் மட்டமான படங்களுக்குத்தான் மிகுதியான விளம்பரம் என்று கூறுவார்கள். இந்த வியாபாரமுறை இலங்கைக்கு எவ்வளவுபொருந்தும் என்பதை இலங்கைமக்கள்தான் முடிவுசெய்யவேண்டும். தேர்தல் பிரசாரத்திற்காக ஆட்சிப் பீடத்தில் இருக்கும் கட்சியார் அரசாங்கப் பணத்திலே தாராளமாகச் செய்த விளம்பரம் என்பது பொருந்தும்.

ஒரே நாளில் இக் காட்சியைப் பார்த்துவிட முடியாது. இரண்டுநாட்களாவது ஓய்விருந்தால்தான் ஆறுதலாகக்கண்டு பயனடையலாம். விளக்கு அமைப்புக்கள் மிகப் பாராட்டும் முறையில் உள்ளன. காட்சிப் பொருள்கள் படம் பிடிக்கத்தக்கன. ஆனால் படம் பிடிப்பவர்கள் — தங்களைப் போலவேபொருட்காட்சிக்குச் சமுகம் தரவருகின்ற...பெண்மக்களையும் அங்கே உள்ள காட்சிப் பொருள்களாகக் கருதிவிட வேண்டியதில்லை.

# சென்னை பரிதாபம்!

## காங்கிரஸ் ஊழல் அகலவேண்டும்

**புதிய அரசாங்கம்** எல்லா மாகாணங்களிலும் அமைப்பதற்கு ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றன. சென்னை மாகாணத்தின் நிலைமைதான் பரிதாப கதியை யடைந்துளது. இங்கு காங்கிரஸ் கட்சிக்குப் போதிய வெற்றிகிடைக்கவில்லையென்பது உண்மையே. என்றாலும் காங்கிரஸ் அன்றி இன்னொரு கட்சி அங்கு அரசியலை அமைத்து நடத்துவது கஷ்டமான காரியம். கொம்யூனிஸ்ட் ஆட்சியை எவரும் விரும்பமாட்டார். வேறெந்தக் கட்சியுடன் சேர்ந்தாலும் கொம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒருபோதும் சேரவியலாதென ஸோஷலிஸ்ட் கட்சியினர் கிருஷாலோகக் கட்சியினர் கூறிவிட்டனர். சுயேச்சைக் கட்சியினரில் பெரும்பான்மையரும் அப்படியே. மற்றைக் கட்சியினரைத் தமது லட்சியத்தைவிட்டுவிட்டுக் காங்கிரஸில் சேரும்படி கேட்பது எப்படி? அக்கட்சியினர் காங்கிரஸில் சேர்ந்துழைப்பாரன்றி அதனில் முற்றாகச் சேரமாட்டார். எனவே காங்கிரஸ் கட்சியினர் வேறு சில கட்சியினரையும் சேர்த்து அரசியலை நடத்துவதே முறை.

### இனி முன்போல் இயலாது

புதிய அரசாங்கத்தை மாகாணங்களில் மேற்கொள்ளும் காங்கிரஸ் கட்சியினர் 'இனி நமக்கு என்ன?' என்று வாளாவிருக்க வியலாது. தேர்தலில் தமக்கு எவ்வளவு நடப்பு நாட்

## இந்தியா

டில் ஏற்பட்டுள்ளதென்பதை அறிந்துவிட்டனர். போதிய திருத்தங்கள் மாற்றங்கள் அரசியலில் விரைந்து ஏற்படுத்தாவிடின் பெரிய வீழ்ச்சியையும் தோல்வியையும் காங்கிரஸ் அடையவேண்டியதுதான். அரசியலிற் புகுந்துள்ள ஊழல்களை உடனே அகற்றவேண்டும்.

### புதிய தேசாதிபதி

இதுவரையும் சென்னை மாகாணத் தேசாதிபதியாகவிருந்த பவநகர் மகாராஜா இளைப்பாறிச் செல்கின்றனர். அவர் இடத்தில் கடமையாற்றும்படி மத்திய அரசாங்கத்தில் மந்திரியாகவிருந்த ஸ்ரீ பிரகாசா அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவர் இவ்வுயர்ந்தபதவியை இனிது வகித்துத் திறமையாகக் கடமையாற்றும் தகுதியும் ஆற்றலும் மிகுதியும் வாய்ந்தவர். முன்னர் பாகிஸ்தானில் இந்தியப்பிரதிநிதியாகவும், அசாம் மாகாணத் தேசாதிபதியாகவும் கடமையாற்றி அனுபவம் வாய்ந்தவர். நன்கு கைதேர்ந்த காங்கிரஸ்வாதி. பலவித கஷ்டங்கள் நிறைந்துள்ள சென்னை மாகாணத்தைச் சீராய் அரசுபுரிதற்கு இவர் தகுதி மிக்கவர். இவர் ஆட்சியிற் சென்னையிற் சகல கஷ்டங்களும் நீங்குமென எதிர்பார்க்கலாம்.

## பரமஹம்சர் ஜயந்தி

### வித்தியாலயத்தில் விழா

**யாழ்ப்பாணம், 28-2-52**

இவ்விழா வைத்தீஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் 27-2-52 புதன்கிழமை மாலை சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. அன்று மாலை 3 மணியளவில் விசேட பூசைகள் நடைபெற்றன. 5 மணிக்குப் பகிரங்கக் கூட்டம் ஆரம்பமாயிற்று. பாடசாலைச் சங்கீத ஆசிரியை செல்வி பத்மாவதி ஐயாத்துரை அவர்களும் மாணவர்களும் இனிய பஜனை ஒன்று நிகழ்த்தினர். வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் பி. ஏ. அவர்கள் விழாவிற்குத் தலைமைவகித்தார்கள். தலைவர் முன்னுரையின் பின் வித்தியாலய மாணவர்கள் செல்வன் சி. பாலசுப்பிரமணிய ஐயர், செல்வன் எம். கோபாலரத்தினம் ஆகியோர் பகவானின் சரிதம், உபதேசம் என்பன பற்றி விரிவுரைகள் ஆற்றினர். வழக்கறிஞர் திரு.வி. நாகலிங்கம் அவர்கள் பேசும்போது யேசுநாதர், புத்தபகவான், இராமகிருஷ்ண பரமஹம்சர், நம்முன் வாழ்ந்த மகாத்மா காந்தியடிகள் ஆகியவர்கள் போதித்த சன்மார்க்க போதனையைக் கடைப்பிடித்தால் மக்கள் உயர்ந்த இலட்சியத்திற் செல்வார்களெனவும் எதிர்காலச் சமுதாயத்தை ஆக்கித்தரும் மாணவர்களாகிய சிறுவர்களை நல்வழியி விட்டுச்செல்லப் பெற்றோரும், ஆசிரியர்களும், பெரியோர்களும் முயற்சிசெய்யவேண்டுமெனவும் அதற்குச் சமயத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வியும் ஒழுக்கமும் அவசியம் எனவும் குறிப்பிட்டார். பின்னர் சங்கீத பூஷணம் சண்முகரத்தினமவர்கள் தமது பக்கவாத்தியக் கோஷ்டியினருடன் சேர்ந்து ஓர் இசைவிருந் தளித்தனர். நன்றியுரையுடன் விழா நிறைவேறியது. இவ்விழா வித்தியாலய இந்துமாணவ கழகத்தாற் கொண்டாடப்பட்டது.

## இலக்கியச் செல்வர்

### வேங்கடரமணி காலமானுர்

பிரபல இலக்கிய கர்த்தாவும் பேரறிஞரும் காந்திப் பக்தருமான திரு. கே. எஸ். வேங்கடரமணி அவர்கள் சென்ற (22-2-52) வெள்ளிக்கிழமை காலை சென்னையிற் காலமானுர்கள் என்ற செய்தியை அறிந்து வருந்துகின்றேம். திரு. வேங்கடரமணி அவர்கள் காவிரிப்பூம் பட்டினத்திற் பிறந்தார்கள். சட்டம் பயின்று அறிஞராக விளங்கிய திரு. வேங்கடரமணி அவர்கள் கவிநயம்பொருந்திய ஆங்கில வசனநடையிற் கனிவு நிறைந்த கருத்துக்களைக்கொண்ட கட்டுரைகளையுங் கதைகளையும் எழுதினுர்கள். இவருடைய புகழ் மேனுட்டிலும் பரவியுள்ளது. 'தேசபக்தன் கந்தன்', 'முருகன் ஓர் உழவன்', 'காகிதக் கப்பல்கள்', 'ஜடாதரன்' என்பனபோன்ற அவருடைய நூல்கள் தமிழில் அழகாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

காந்தியப் பண்பாட்டிற் கால்கொண்ட அவரது எழுத்துக்கள் தனிச்சிறப்பு வாய்ந்தன. 1939-ம் ஆண்டிற் பாரதமணி என்னும் வாரப்பத்திரிகையை ஆரம்பித்துப் பத்து ஆண்டுகள் வரை அதனைச் சிரமத்துடன் சிறப்புற நடாத்தி வந்தார். ஈழகேசரியின் இலக்கியப்பணியைப் பாராட்டி வந்த திரு. வேங்கடரமணி அவர்கள் ஈழகேசரியைத் தவருதுபடித்துவந்தார்கள். சில மாதங்களுக்குமுன்னர் அன்னுரின் அறுபதாண்டு நிறைவுவிழா பொருத்தமான முறையிற் சென்னையிற் கொண்டாடப்பட்டது. அன்னுரின் ஆன்மா சாந்தியடைவதாக!

### மகுடாபிஷேகம் மற்ற வருடம்

மகாராணி இரண்டாவது எலிசபெத்தின் மகுடாபிஷேகம் இந்தவருடம் நடைபெறுதெனப் பிரிட்டிஷ் செய்தி ஸ்தாபனம் அதிகாரபூர்வமாக அறிந்துளதாகத் தெரிவிக்கிறது.


### ஆசிரிய கலாசாலைப் பிரவேச வகுப்பு

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலைமண்டபத்தில் மேற்படி வகுப்பு, கரவருடம் மாசிமீ 18-ம் தேதி (1-3-52) சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி (31-5-52) வரையும் நடைபெறும்

வகுப்பிற் சேர விரும்புவோர் வகுப்புக்காலம் முழுவதற்கும் உரிய வேதனப் பணம் முப்பது ரூபாவையும் முற்பணமாகச் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். விடுதியிற் சேர விரும்புவோர் மாசம் இருபத்தைந்து ரூபா வீதம் செலுத்த வேண்டும்.

இங்ஙனம்
சோ: நடராசா

சைவ ஆசிரியகலாசாலை,
திருநெல்வேலி, 28-2-52.
[4552—ii]


## கால்நடைகளைக் காப்பாற்றுக!

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யிலுள்ள பயிர் விளைக்கச் செய்வதென்னே என்றிருத்தல் அறிவாளிகளின் செயலாகுமோ? எனவே, நம் தமிழ் நாட்டிலுள்ள கால்நடைச் செல்வத்தைக் கவனிக்காமலும், அது எவ்வாறு கரைகிறது என்பது பற்றிக் கவலைப்படாமலும் இன்று நாம் வாளாவிருப்பின், நாளையே நமது உழவும் வாழ்வும் ஊறுடன் மடிவது உறுதி என்று எச்சரிக்கிறேம்.

இனி நாம் செய்யவேண்டிய கடமை யாது? "உங்கள் நாட்டுப் பசுக்களையும் மாடுகளையும் சரியாக நீங்கள் பாலிப்பதில்லை" என்று நம்மைப் பார்த்து ஏளனம் செய்தார் ஆங்கில விஞ்ஞானி ஹால்டேன். தமிழ் நாட்டுப் பெருமக்கள் இனித் தமது மாடுகளை எந்தக் காரணத்தைக்கொண்டும் தாமே கொல்லுதலும் தகாது; கொல்லும் பிறர்க்கு விலைக்குக் கொடுத்தலும் தவறு. கருணையும் பொருளாதாரமும் கலந்து பிணைந்துள்ள இப்பிரச்சினையைக் கருத்துடன் ஆராய்தல் நம் கடன். முன்னர் விதித்திருந்த தடை உத்தரவையே மீண்டும் நம் அரசாங்கம் விதித்து, நம் நாட்டிலிருக்கும் கால்நடைகள் திருவாங்கூருக்காயினும் வேறெந்த நாட்டிற்காயினும் அனுப்பப்படுதலைக் கண்டிப்பாகத் தடுத்தல் அவ்வரசாங்கத்தின் தலையாய கடன். பொது மக்களும், அரசாங்கமும் பூரண உணர்வுடன் பணிபுரிந்தால், பொங்கெழில் பசுக்களும் மாடுகளும் தங்குவதோடு நம் நாட்டிடைச் செல்வம் தழைக்கவும் துணை செய்யும்.


### ஞாபகார்த்தம்

1944-ம் வருடம் மாசி 28-ந் திகதி இந்த உலகை விட்டுப் பிரிந்த மேர்ஸி சுகிர்தரத்தினம் சாமுவேலின் அன்பான ஞாபகார்த்தம்.

"இரவில்லாத நித்தியபகலும்,
நோயற்ற வாழ்வுமே
சாகாத தூயர் வாழ்ந்திடும்
பேரின்ப நாட்டிலே."

"Westholme"
Kinross Avenue,
Bambalapitiya.
[4550]


## வானிசை

★ வசந்தன் ★

### கொழும்பு வானெலி

சிலகாலமாக 'ரேடியோ சிலோன்' நிலையத் தயாரிப்புகளைக் கவனித்திருந்தால் எல்லாம் புரட்சிகரமாகத் தோன்றியிருக்கும். 'ஒலிமஞ்சரி', 'கலைவிழா', 'அரங்கேற்றம்' முதலியன இப் புரட்சிகளுட் சில. இந்தப் புரட்சிகள் புரண்டுகொண்டே போகின்றன. கலைவிழா என்ற புரட்சிக்கு ஒரு வருடம் ஆகப் போகிறதாம். ஓராண்டு நிறைவைக் கொண்டாட ஆண்டு நிறைவுப் புரட்சி ஒன்றும் நடக்கப்போகிறதாம். இவ்வளவு காலமும் நடந்த கலை விழாக்களிலே பாட்டுக் கச்சேரி செய்தவர்கள் எல்லோரும் பெண்களாம். ஆண்டு நிறைவுப் புரட்சி என்றபடியால் என்ன நடக்குமோ தெரியவில்லை.

இராக லட்சணம்

இப்படி ஒரு நிகழ்ச்சி சில நாட்களுக்குமுன் 'ரேடியோ சிலோன்' சங்கீதப் பகுதியினர் தயாரித்து நடத்தினுர்கள். இந்த நிகழ்ச்சி பொதுவாக எல்லோரும் கேட்க வேண்டுமென்றே ஒழுங்கு செய்யப்பட்டது என்று தோன்றிற்று. ஆனுல் நடத்தியவர்கள் அதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. வானெலியில் வேண்டியபடி உளறிவிட்டுப் பணம் சம்பாதிக்கலாம் என்று நினைக்கக்கூடாது. இவ்வித நிகழ்ச்சியைத் தொடங்குமுன் நிகழ்ச்சிக்கு முன்னுரையாக இராகங்கள் என்ருல் என்ன? இவைகள் எப்படி உண்டாயின? எப்படிவளர்ந்தன? இவைகளைக் கையாளுவது எங்ஙனம்? ஒரே இராகத்தை ஒருவர் பாடும்பொழுது நன்ருகவும், வேருெருவர் பாடும்பொழுது நன்ருயில்லாமலும் இருப்பது ஏன்? இவை போன்ற விஷயங்களைச் சொல்லி இராகங்களுக்குள்ள அழகு, குணம், உருவம் முதலிய இலக்கணங்களைப் பின் சொன்னுல் அல்லவோ, பலர் நமது கலைச் செல்வத்தை அறிவார்கள். அதுவன்றி 'மாயா மாளவ கௌள சர்வ கமக வரிக ரக்தி' இராகம் என்று ஒருவர் சொல்ல இன்னெருவர் மத்யமம் அசையக்கூடாது, தைவதம் அசையக்கூடாது என்று சொன்னுல் அதுபொருந்துமா? இராக லட்சணங்கள் புத்தகங்களில் எழுதியிருந்தால் அவைகளை வாசித்து ஒலி பரப்பினுல் போதுமா? அவைகளை விளங்கி அனுபவ முறைகளைப் பாடிக் காண்பிப்பதோ அல்லது இசைக் கருவிகளில் வாசித்துக்காண்பிப்பதோ பொருந்தும். அதுவன்றி ஒருவர் இராக லட்சணங்களை வாசிக்க இன்னெருவர் தான் பாடுவதற்கு லட்சணம் கூறுவதுதான் இராக லட்சணமோ? பாடியவர் பேசியது (மாணவர்களுக்கு என்றும் குறிப்பிட்டார்) நன்கு தமிழ்ப் படித்த தமிழ் மாணவருக்கோ அல்லது மற்றவர்களுக்கோ விளங்கியிராது. இவர் தமக்கு விளங்கும் விஷயங்களைத் தமிழ் மூலம் நன்கு விளக்கும் முறையைக் கற்றுக்கொள்ள வேண்டும். இவர் பேசிய சிலவற்றைத் தருகிறேம். ஓரிடத்தில் 'பாடவோ சுரங்களினுல் செய்யவோ' என்றும் இன்னும் ஓரிடத்தில் 'அந்த மாதிரிப் பிடிகள் பிடில் வாத்தியத்தில்' என்றும், வேருேரிடத்தில் 'ரசிகப்பிரியாவன் முழு இதுவும் வந்திருக்கும்' என்றும் சொன்னுர். சுரங்களினுல் செய்வது என்ன? எந்தமாதிரிப் பிடிகள்? அவைகளுக்குப் பெயர்களில்லையா? ரசிகப்பிரியாவின் முழு இது என்ன? என்று கேட்கிறேம்.

இந்த நிகழ்ச்சியிற் பேசியவரது குரலோ, அல்லது பாடியவரின் குரலோ நன்ருக அமையவில்லை. தெளிவாகப் பேசுகிறவர்களும் நன்ருகப் பாடுகிறவர்களும் இதிற் பங்குபற்றவேண்டும்.

## நஞ்சுண்டு மடியக் கச்சைகட்டும் கட்சி

{ நமது அரசியல் நிருபர் }

அரசியல் விஷயமாக வவுனியாப் பிரதிநிதி திரு. சுந்தரலிங்கம் ஏதோ ஒரு அதிர்ச்சியை உண்டாக்கியவண்ணமாகவே யிருக்கின்ருர். வவுனியாத் தொகுதிக்குப் போட்டியிடுவதுடன் யாழ்ப்பாணத்தில மந்திரி ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களை எதிர்ப்பதற்குச் சரியான பேர்வழிகள் இல்லா நுபோனுல் யாழ்ப்பாணத் தொகுதிக்குந் தாம அபேட்சகராக நிற்கப்போவதாகத் திருகோணமலையில் நடைபெற்ற மாபெருங் கூட்டத்திலே தெரிவித்துள்ளார். அக் கூட்டத்தில் இவர் தமிழரசுக் கட்சியினருக்கும் தலையடி கொடுத்திருக்கினுர். தமிழரசுக் கட்சியைப்பற்றி திரு. சுந்தரலிங்கம் அவர்கள் கூறியதாவது: "எனக்கும் தமிழரசுக் கட்சியினருக்குபபிடித்துள்ள வியாதி ஒன்றேயானுலும் அவ்வியாதியைக் குணப்படுத்தும் விஷயத்தில் அக்கட்சியினர் தரும் மருந்தும் அனுபானமும் எனக்கு ஒத்துவரமாட்டா. தமிழரசுக் கட்சியினர் வியாதியைக் குணப்படுத்துவதற்குப் பதிலாக நஞ்சைத் தின்று மாண்டுமடியப்பார்க்கின்றனர்.


### அறிவித்தல்

மீசாலை இறை "இலந்தைக் கூடல்" என்னுங் காணி அவ்வூர் இலந்தைக் கூடலில் எழுந்தருளியிருக்கும் வீரகத்திப் பிள்ளையாருக்கு 1870-ம ஆண்டில் தருமசாதனம் செய்யப்பட்டிருக்கிறபடியால் மேற்படி காணியை விற்கவும் வாங்கவும் வேறு வகையில் பராதீனப் படுத்தவும் யாருக்கும் உரிமை இல்லை என்பதை இத்தால் யாவருக்கும் அறிவத்துக் கொள்ளுகிறேன்.

[காணி விபரம்:- கிழக்கு தம்பு பெண் பாறுப்பிள்ளையும் மறு. வடக்கு இராமலிங்கமும் மறு, மேற்கு வாரித்தம்பி கைமபெண் காசிப்பிள்ளையும் மறு; தெற்கு ரேட்டு. நிலப்பரப்பு 11.]

இங்ஙனம்
வீரகத்திப்பிள்ளையார் கோவில் சொந்தக்காரர்
T. K. சுந்தரக்குருக்கள்

மாக்கொடை,
அல்கர்ஜேயா, 20-2-52.
[4553]


### பொதுத் தேர்தல்

இலங்கையின் புதிய பொதுத் தேர்தல் கொழும்புப் பொருட்காட்சி முடிவடைந்த பின்னர் வெகு விரைவில் நடைபெறக்கூடுமென அரசியல வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

# நாலும் நாற்கயிறும்

### 3. பாசக் கயிறு

**புதிய** ஸைக்கிள் வண்டியின் சில்லு மிக இலகுவாகச் சுழலுவதோடு ஓர் இனிய ஓசையையும் எழுப்பிக்கொண்டிருக்கும். அதுபோலத் தங்கராஜனினதும், பஞ்சகல்யாணியினதும் நாவிலாடிய வாழ்க்கைச் சக்கரம் தங்கு தடையின்றிச் சுழன்றதோடு ஓர் இன்ப நினைப்பையும் அவர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருந்தது.

காதலர்களுக்கு இடையூறுகள், பகைவரால், கள்வரால், விலங்குகளால் சம்பவிப்பது வழக்கம். அதுவும் கதையுலகில் சொல்லத் தேவையில்லை. இங்கே மேற்கூறிய இடையூறுகள் ஒன்றும்சம்பவியாது, பரமசாதுவான ஒரு பூனையினால் ஒரு இடையூறுஏற்பட்டது.

சாளரப் படியிலிருந்த பூனை எதிர்ப் பக்கத்துக் கூரையிலுலாவிய ஒரு எலியை நோக்கிக் குறி வைத்துக்கொண்டிருந்தது. பூனை எவ்வளவு அமைதியாக எலிக்கு இலக்கு வைத்தபோதிலும், அதன் வால் அதற்கு அமைவதில்லை. அது அப்படியும் இப்படியும் அசைந்துகொண்டேயிருந்தது. அந்த அசைவு சாரளத்துக்கூடாக வெளியே சென்ற நாலை அசைத்து அசைத்து இழுத்துவிட்டது.

இரவு ஒரு மணி அடித்ததும், வழக்கம்போல் உற்சாகமாகப்புறப்பட்ட தங்கராஜன், சாளரத் திரையில் வந்ததும் நாலைக் காணுது திகைத்தான். பஞ்சகல்யாணி தன்னை ஏமாற்றிவிட்டாள் என்று நினைத்துக் கோபத்தோடு வீட்டுக்குச் சென்று படுத்தான். அதிகாலையில் எழுந்த பஞ்சகல்யாணியும் தங்கராஜன் வராதது கண்டு வருந்தினுள். தங்கராஜனுக்கு அன்று கல்லூரியிற் கொடுப்பதற்கென்று ஒரு காகிதத்தை வரைய மேசையருகில் போயிருந்தாள். அப்பொழுது அவளுக்குக் குடலைப் பிடுங்கிக்கொண்டு உவாந்தி வந்தது. உவாந்தி எடுத்துவிட்டுப் பின்பு வந்திருந்தாள். அடுத்த அறையில் தனது சிறிய தாயாரும் சிறிய தந்தையாரும் சம்பாஷித்தது அப்பொழுது அவள் காதில் விழுந்தது.

'தங்கமணி விடிய எழுந்தவுடன் உவாந்தி எடுக்கிருளே! ஏதும் சுகமில்லையோ?'

'அவளுக்கு இந்தமாதம் மாதவிலக்கும் வரவில்லைப்போ

கசின்

லிருக்கிறது; எனக்கு முந்தியல்லவா அவளுக்கு வருவது வழக்கம்; நான் வந்து முழுகியும் விட்டேனே.'

'இதை நீ ஒரு சாதாரண சம்பவம்போல் சொல்லுகிருயோ?'

'நான் என்ன செய்யலாம்; அவள் அப்பாவுக்குச் செல்லப்பிள்ளை. நீங்கள் வேண்டுமானுல் அவருக்கு இப்படி விஷயம் என்று சொல்லிப் பாருங்கள்.'

'வித்தியாசமாக நினைப்பதற்கு ஒரு இடமுமில்லையே. நாங்கள் நினைப்பதுபோலானுல் எப்படி நடந்திருக்கும்?'

'எனக்கு ஒன்றுமே தெரியவில்லை; இனி அவதானித்துப் பார்க்கிறேன்.'

இந்தச் சம்பாஷணை தங்கமணிக்குக் கேட்டதோடு அதற்கடுத்த அறையில் படுத்திருந்த பென்ஷனியர் செல்லப்பாவுக்கும் கேட்டது. தான் ஒரு கர்ப்பிணியாயுமிருக்கலாம் என்ற எண்ணம் அப்பொழுதுதான் அவளுக்குமுதன்முதல் அவள் மனதில் தோன்றியது. உடனே அவளுக்கு ஒரு அதிர்ச்சி வந்தது. கண்கள் கலங்கின. அக்கலக்கத்தினுடனேயே காகிதமும் எழுதத் தொடங்கினுள்.

இன்று இரவு பதினெரு மணிக்கு நாவல் மரத்தின் கீழே நிற்பேன்; என்னை வந்து அழைத்துப் போகவேண்டும். இனி அரைக்கணமும் இவ்வீட்டில் தங்க முடியாது. நீங்கள் என்னை வந்து அழைத்துப் போகாவிட்டால், எனது பெயர் பாடசாலையில் விளங்கவும், என்னை நீங்கள் காதலிக்கவும் ஏதுவாயிருந்த நாற்கயிறே எனக்குப் பாசக் கயிருக முடியும். எந்த நாவல் மரத்தின்மூலம் நீங்கள் எங்கள் வளவுக்குள் நுழைவீர்களோ? அந்த நாவல் மரத்தின் கொம்பில், எந்த நாவல் மரத்தின் கீழ் நாங்கள் இருவரும் சல்லாபிப்போமோ, அந்த நாவல் மரத்தின் கீழ் பிணமாய்த் தூங்குவேன். இவ்வளவுநாளும் எந்த ஆட்டுக்கடா எங்கள் நிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்ததோ, அதே ஆட்டுக்கடா நான் தூங்குவதையும் பார்த்துக்கொண்டிருக்கும். இதுதான் அக்கடிதத்தின் சுருக்கம். இக்கடிதத்தை எழுதிப் புத்தகத்துள் வைத்துவிட்டுப் பல் தேய்த்துக் குளிப்பதற்கு வெளியே சென்றுள்.

தனது தம்பியும் மனைவியும் சம்பாஷித்ததைக் கேட்ட பென்ஷனியர் செல்லப்பாவுக்கு உடனே இரத்த அமுக்கம் என்று சொல்லப்படுகிற்கிறுதி ஒன்று சிறிதாக வந்து பின் தெளிந்து குறுவெயர்வையோடு இருந்து அவர் ஆலோசித்தார். பின்னர் எழுந்து தங்கமணியின் அறைக்குள் போனுர். அங்கே அவள் இல்லை. மேசைமீதிருந்த புஸ்தகங்களைப் புரட்டிப் பார்த்தார். அவைகளுக்குள் அக் காகிதம் தோன்றியது. எடுத்து வாசித்துப் பார்த்தார். இரண்டாம் முறையும் இறுதி வந்தது. அப்படியே புத்தகத்துள் வைத்துவிட்டுத் தமது அறைக்குத் திரும்பிச் சென்று படுக்கையில் படுத்துக்கொண்டு ஆலோசித்தார். ஒன்றும் விளங்கவில்லை.

எழுந்து தமது நண்பரொருவரிடம் சென்றுர். எல்லா விஷயங்களையும் அவரிடம் சொன்னுர்.

அவர் 'உமக்குப் பெரிய அதிர்ஷ்டம்?' என்று சொன்னுர்.

'என்ன அதிர்ஷ்டம்?'

'ஒரு பெண்ணுக்குச் சீதனம் கொடுத்துச் செய்வதானுல் எவ்வளவு தொகைப் பணம் வேண்டும். இப்பொழுது ஒரு செலவும் இன்றிக் காரியம் கைகூடுகிறதே!'

'ஆனுல் ஆள் எப்படிப்பட்ட ஆளோ?'

'உமது மகள் அப்படியொன்றும் பிழை விடமாட்டாள்; கல்லூரியிற் படிப்பவனுய்த்தானிருக்கும்; கலியாணத்தை முடித்துக்கொண்டு நீர் பின்னர் படிப்பித்தால் சரியாய்ப் போச்சுது?'

'நான் அதிகம் எண்ணியிருந்தேன்?'

'நாம் எண்ணுகிறபடி எல்லாம் நடந்து வருகிறதா? இதில் வேறென்றுஞ் செய்ய இயலாது. மாதவிலக்கும் வரவில்லையென்று சொல்லுகிருய். இதற்குமேல் தடுத்தால் எல்லாம் விபரீதமாக முடிந்துவிடும். கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைவதுதான் சரியான வழி.' இவ்வளவோடு அவர்கள் இவ் விஷயத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி கட்டிவிட்டனர்.

அன்று பூரணை; புரட்டாதி மாதம், பூரட்டாதி நட்சத்திரம், சனிக்கிழமை, உமாமகேசுவர விரதமுங் கூட. இவ்வளவுங் கூடிய சுபதினத்திலே, அன்றைய இராப்பொழுதிலே எத்தனையோ விஷயங்கள் நடக்கப்போகின்றன. முழுவதற்கும் பின்னணியிற் காட்சியாகக் காய்த்துப் பழுத்த நாவல் மரம் விளங்கப்போகின்றது.

பென்ஷனியர் செல்லப்பா சிவன் கோயிலுக்குப் போய் மறுநாட்காலையே வருவதாகக் கூறி மாலையில் வெளியே போய்விட்டார். அவரின் தம்பியும் மனைவியும் 'ஓரிரவு' என்ற படம் பார்க்கக் கிளம்பிவிட்டார்கள். அவர்கள் பார்க்கப்போகின்ற ஓரிரவைத் தூக்கப் போகிறது இங்கே நடக்கப்போகிற ஓரிரவு என்று அவர்களுக்குத் தெரியாது.

வீட்டில் தங்கமணியும் இராமசாமி என்னும் வேலைக்காரனுமே மிச்சம். தங்கமணி

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)


## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 34,36700. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.**

**பங்குப் பணம் கட்டுமுறை:**

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானு ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்:**

க்ஷேமப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம் 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா கோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்

[4537]





**பஜனுவளி:** பிரசுரம்: ஸ்ரீ ராமகிருஷ்ணமடம், மயிலாப்பூர், சென்னை; விலை: ரூ.3-0-0; பக். XVIII+316.

வடமொழி, தமிழ், கன்னடம், இந்துஸ்தானி, மஹாராஷ்ட்ரம் முதலிய மொழிகளில் பெரியோரால் பாடப்பட்டிருக்கும் திவ்யநாம ஸங்கீர்த்தனங்களைச் சிறந்த முறையில் தொகுத்து ஸ்ரீ ராமகிருஷ்ணமடம் 'பஜனுவளி' யென்ற புஸ்தகமாகப் பதிப்பித்திருக்கின்றது.

முத்துஸ்வாமி தீக்ஷிதர், சங்கராச்சாரியார், சதாசிவப்பிரமேந்திரர், தியாகராஜர், துளஸீதாஸர், ராமதாஸர், கபீர்தாஸர், ஜயதேவர், சுகர் போன்ற பல ஞானிகள் அருளிச் செய்த பாக்கள் இப் புத்தகத்தின் முதல் 18 பாகங்களை யலங்கரிக்கின்றன. சுலோகங்களும், கீர்த்தனங்களும், நாமாவளிகளும் தேவநாகரத்திலும் தமிழிலும் அச்சிடப்பட்டிருக்கின்றன.

பத்தொன்பதாம் பாகத்தில் திவ்யப்ரபந்தம், தேவாரதிருவாசகம், திருப்புகழ், திருவருட்பா முதலிய நூல்களிலிருந்தும், அருணுசலக் கவிராயர், அச்சுததாஸர், கோபாலகிருஷ்ணபாரதிமுதலானோரின் கீர்த்தனைகளிலிருந்தும் சில பாக்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

இப்புத்தகத்திலுள்ள எல்லாப் பாட்டுக்களுக்கும் இராக தாளங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

கோயில்கள், பஜனை மடங்கள், ஆச்சிரமங்கள், பள்ளிக்கூடங்கள் முதலிய இடங்களில் பஜனை முறையைப் பயிலுவதற்கும், பயிலுவிப்பதற்கும் இப் புத்தகம் இன்றியமையாததாக இருக்கும்.

—கே. எஸ். கிருஷ்ணன்

நமது வாசிகசாலையில் விமர்சனத்துக்கு நூல்கள் அனுப்புவோர் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்புதல் வேண்டும். மதிப்புரை விரும்புவோர் இதனைக் கவனிப்பாராக.

**பூவின் சிரிப்பு:** கட்டுரைகள். ஆசிரியர்: பெ. தூரன்; பிரசுரம்: அமுத நிலையம் லிமிடெட், தேனும்பேட்டை, சென்னை 18; விலை: ரூபாய் 1-8-0.

கட்டுரை இலக்கியம் தமிழுக்குப் புதியதொன்றெனக் கூறின் அது மிகையாகாது. குண்டூசி தொடக்கம் யானை ஈருக எந்தவிதமான பொருளையும் எடுத்துக்கொண்டு அழகான கட்டுரைகள் தீட்டுவதில் மேனுட்டு அறிஞர்கள் திறமை மிக்கவர்கள். தமிழிலும் இப்போது பல ஆண்டுகளாகச் சிறந்த கட்டுரைகளை எழுதுவதில் அறிஞர்கள் பலர் நல்ல வெற்றி கண்டு வருகின்றனர். கட்டுரை எழுதுவதற்கு இலக்கியச் சுவையுங் கலைப் பண்பும் அத்தியாவசியமாகும். இவ் இரு பண்புகளும் ஆசிரியர் தூரன் அவர்களிடம் நிறையவுண்டு. நல்ல நூல்களைப் படிப்பதிலும் தனியே உலாவச் செல்வதிலும் ஆர்வம் அதிகமுள்ள திரு. தூரன் அவர்கள் இயற்கை வளனையும் தமது கற்பனைத் திறனையும் இக் கட்டுரைகளில் நன்கு கையாண்டுள்ளார். 'மழைக்காலக் காட்சி' என்ற கட்டுரையிலுள்ள ஒரு சிறுபகுதியை இங்கு காண்க. "வானவெளி சிறிதும் கண்ணுக்குப் புலனுக இல்லை. புகையைச் சுருளாக மடித்து ஆகாயத்தையே மறைத்துப் பரப்பிவைத்தது போல எங்கும் மேகப் படலம். கறுத்துச் சூல்முதிர்ந்த கொண்டல் அல்ல; கொட்டிப்பட்டை செய்யக் குவித்த வெண் பஞ்சுபோன்ற மஞ்சுமல்ல. வெண்மையிலே கறுப்பை அள்ளித் தெளித்து ஒரு பொட்டு நீலத்தையும் கூட்டி அவைகளையும் நன்கு ஒன்ருேடொன்று சேராதபடி ஒளியற்ற வர்ணக் கலவையாகச் செய்ததுபோன்ற புகை மேகங்கள் ............" இக் கட்டுரைத் தொகுதியிலுள்ள ஒவ்வொரு கட்டுரையும் ஒவ்வொரு அழகுடன் விளங்குகின்றது.

●

**புயல்:** ஆசிரியர்: சிரஞ்சீவி; துணை ஆசிரியர்: கே. ஸ்ரீ; காரியாலயம்: 11, மக்ரீன் தெரு, சென்னை 1; சுன்னுகத்திற் கிடைக்குமிடம்: இன்பநிலையம், பத்திரிகை விற்பனையாளர், சுன்னுகம்; தனிப்பிரதி சதம் 55.

ஆசிரியர் சிரஞ்சீவி அவர்களின் புரட்சிகரமான முயற்சிகளிற் புயல் வெளியீடும் ஒன்று. இதிற் புதுமையும் புரட்சியும் நிறையவிருக்கின்றன. சிறந்த கதைகளைத் தெரிந்தெடுப்பதற்கான ஒரு போட்டியும் புயல் முதலாவது இதழில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.




அன்பான மருமக்களே!

இந்தத் தள்ளாத வயதில் பிரயாணம் செய்வது எனக்கு மிகச் சிரமமாக இருந்தது. என்றாலும் கொழும்புக் காட்சியை எனது கண்களாற் பார்த்துவிட்டுத் திரும்பியும் விட்டேன். இரண்டு நாட்கள் காட்சிக்குப் போயிருந்தேன். ஒருமுறை பெரும்படியாக எல்லாவற்றையும் பார்த்துவிட்டுப் பின் ஆராய்வுடன் ஒவ்வொன்றையும் பார்த்துச் சென்றேன். கேட்கவா வேண்டும், இலங்கையின் முன்னேற்றத்தைப்பற்றி. எங்கள் நாடு பிற நாடுகளுடன் சரி நிகராக நிற்பதை அங்கு காண முடிந்தது. தமிழ் மாணவிகளின் ஆடல் பாடல்கள் அற்புதமாக இருந்தன.

எனது மருமக்களாகிய உங்களிற் சிலரையும் பிரகாசிக்கும் அந்தக் காட்சியிற் கண்டேனே, என்னவோ? பள்ளிக்கூடப் பிள்ளைகள் பார்த்துப் பயனடைய வேண்டிய பல பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் நீங்கள் போய்ப் பார்க்கவேண்டும்.

கேசரிமாமா

# கோணேஸ்வரர் ஆலயம்

**மே. 593 கு. ஸ்ரீரங்கநாதன்**

வானுயர்ந்த கோபுரமும் வளமிருந்த பாவநாசச் சுனையும் ஆயிரம் தூண்களும் அணிவகுத்து நின்ற ஆலயம்.

இலங்கையிலுள்ள புனிதத் தன்மை வாய்ந்த பழைய ஸ்தலங்களுள் திருக்கோணேசலமும் ஒன்று. ஏழாம் நூற்றாண்டில் இருந்த திருஞான சம்பந்தரால் தேவாரம் பாடப்பெற்ற இந்த ஸ்தலம் திருக்கோணமலையிலிருக்கும் கோட்டைக்குள் இருக்கும் கோணேஸ்வர ஆலயமே!

இதன் பெருமையையும், பழமையையும், புனிதத் தன்மையையும், சரித்திரத்தையும் கூறும் புராணங்களிரண்டும், கல்வெட்டு என்னும் ஒரு சாதனமும் உண்டு.

ஈழமண்டலத்திலே பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தும் புனிதத்தன்மைவாய்ந்ததாகக் கருதப்பட்டதுமாகிய திருக்கோணமலையிலே இவ்வாலயம் விளங்கியது.

ஏறக்குறைய 436—450 கி. பி. இந்தியாவிலிருந்துவந்த குளக்கோட்டன் என்னும் சோழ அரசனால் இக்கோயில் திருப்பணிவேலை செய்விக்கப்பட்டு அவனால் வேண்டிய நிதியும் வழங்கப்பட்டது. இந்த அழகிய கோயில் கிறிஸ்துவுக்கு ஆயிரம் வருஷங்களுக்கு முன்னும், பின்னும் இந்தியாவிலுள்ள மிகப் பெரிய கோயில்களைப்போல் சிற்ப வேலைகளிலும், அழகிலும், அமைப்பிலும், மூர்த்திதலம் தீர்த்தத்திலும் சிறப்பு வாய்ந்து, ஆயிரக்கால் மண்டபம் உடையதாகவும் ஒவ்வொரு தூணிலும் சிற்பச் சித்திரங்கள் பொறிக்கப்பட்டதாகவும் விளங்கிய காலத்தில் கி. பி. 1624-ம் ஆண்டளவில் மத வெறியும் பொருளாசையுங் கொண்ட பறங்கித் தளபதி கொன்ஸ்டன்டைன் டீசா என்பவனால் இருந்த இடமுந் தெரியாமல் இக்கோயில் இடிக்கப்பட்டுப் பொருள்களும் சூறையாடப்பட்டன. அன்பர்கள் கிடைத்த கோயில் விக்கிரகங்களை ஆங்காங்கு மறைவாக எடுத்துச் சென்று நிலத்திலும் காட்டிலும் மறைத்தனர்.

ஆயிரம் தூண்களில்—ஐந்நூறு இடதுபக்கமும் ஐந்நூறு வலதுபக்கமுமாக ஆயிரம் விளக்குகள் பூஜை நேரத்தில் எரிந்துகொண்டிருக்கும். பதினொரு மூக்குகளைக் கொண்ட பெரிய குத்துவிளக்குகள் மூலஸ்தான வாசல் அருகிலே எரிந்துகொண்டிருக்கும். மூலவாசல் முன்னே பொன்னாற் செய்யப்பட்ட தாமரை மொட்டு வடிவமான முடியையுடைய ஒரு குத்துவிளக்குப் பிரகாசித்துக்கொண்டிருக்கும். அதன் மூலையில் சிங்கள அரசன் கஜவாகு கோயிலுக்குக் கொடுத்த இரத்தினக் கல்லு இளஞ் சூரியனைப்போல ஒளி வீசும்.

—தொடரும்

**வடமாகாண**

**ஆசிரியர் சகாய நிதிச் சங்கம்**

இச்சங்கத்தின் பதினெட்டாவது வருடாந்தக் கூட்டம் நிகழும் 1952-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 8-ந் திகதி (8-3-52) சனிக்கிழமை காலை 10 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

அங்கத்தவர் அனைவரும் சமுகமளிக்கும்படி அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

8, பிறவுன் றேட், நீராவியடி,
யாழ்ப்பாணம்,
22-2-52.

இங்ஙனம்
கா. வைரமுத்து
காரியதரிசி

[4547]

## மாமா பதில்

கி.590 பொ. கணேசலிங்கம்; கடவுளை நம்பினோர் கைவிடப் படமாட்டார் என்பது உமது கதையிலிருந்து அறிய முடிகின்றது.

மே.389 நா. பொ. தருமலிங்கம்; உமது கவிதை கிடைத்துப் படித்துப் பார்த்தேன். நன்றாக இருக்கின்றது.

மே.483 செ. துரைரத்தினம்; தீர விசாரியாமல் ஒன்றும் எழுதியனுப்பக்கூடாது. உமது பதிவு இலக்கத்தை மறக்க வேண்டாம்.

மே.523 நா. சோமசுந்தரன்; மாணவர்கள் சிறுவயதில அரசியலில் ஈடுபடுவது நல்லதல்ல. ஆனால் விஷயங்களை அறிந்திருத்தல் நல்லது.

மே.587 மு. ஆலாலசுந்தரம்; கட்டுரைகளைச் சுருக்கமாக எழுதி அனுப்ப வேண்டும்.

## எனது கிராமம்

**மே. 586 வ. சி. நடராசா**

எனது கிராமத்தின் பெயர் கருணைவாய். இக் கிராமம் பருத்தித்துறைக்குத் தென்மேற்கே ஐந்து மைல் தூரத்தில் உள்ளது. யாழ்ப்பாணத்திற்குத் தென்கிழக்கே பதினாறு மைல் தூரத்தில் இருக்கின்றது. எனது கிராமத்திற்கு மேற்கே வல்லை வெளியும், கிழக்கே கரவெட்டி என்னும் கிராமமும், வடக்கே பொலிகண்டி என்ற அயலூரும் தெற்கே கப்பூது என்ற ஊரும் எல்லைகளாக உள்ளன. எனது கிராமத்தினூடாகப் பெரியதோர் போக்குவரத்து வீதி உள்ளது. இவ்வீதி வழியாகப் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும், நெல்லியடியிலிருந்து மானிப்பாய்க்கும் மோட்டார் வண்டிகள் போய்வருகின்றன.

இக் கிராமத்தில் ஆறு தமிழ்ப் பாடசாலைகளும், ஐந்து சனசமூக சேவாசங்க வாசிகசாலைகளும், ஓர் உப தபாற்கந்தோரும், ஓர் உப்பு வெளியும் உள்ளன. இவைகள் நமது கிராமத்திற்குப் பெரிதும் சிறப்பு வாய்ந்தனவாக அமைந்திருக்கின்றன.

எனது கிராமத்தில் வசிப்பவர்களிற் பெரும்பாலானோர்கள் கமக்காரர்களே. எம் கிராமத்திலிருக்கும் ஒரு பெரியாரே பருத்தித்துறைத் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவராயிருக்கின்றார். இவரின் பெயர் திரு. இராமலிங்கம் ஆகும். இவர் இக்கிராமம் முன்னேறுவதற்காகப் பெரிதும் பாடுபட்டு வருகின்றார்.


**பிறந்த தின வாழ்த்துக்கள்**

**2-3-52 — 8-3-52**

கி.10 ச. மகேஸ்வரி; கி.52 செ. தர்மலிங்கம்; மே 108 வை. பத்மாஜனி; மே.140 க. கனகராசா; மே.197 பொ. காராளசிங்கம்; மே.232 பெ. வேலுச்சாமி: கி.458 வி. சிவமூர்த்தி; மே.477 க. இராமநாதன்.

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல இன்னும் பல்லாண்டு வாழ்வார்களாக.

மிருகங்களும் பறவைகளும் 8



# கோழி

**மே. 523**
**நா. சோமசுந்தரன்**

கொக்கரக்கோ...! கொக்கரக்கோ!!

இது நாம் வைகறையில் தினமும் கேட்கும் சத்தம், விடியப்போகிறதென்பதற்கறிகுறி. கதிரோன் புறப்பாடு கண்டு, களிப்புக் கொண்டு கோழிகள் கூவத் தொடங்கும். செக்கல் வெளுத்துவிட்டது, காலை அண்மிவிட்டதென்று நமது நாட்டில் அறிவிக்கும்முக்கியபறவைகோழிதான்

கோழிகளிலே, மற்றைய பறவைகளி லிருப்பதைப்போலவே, சேவல், பேடு என்னும் வர்க்கங்கள் உண்டு. சேவல் பார்ப்பதற்கு அழகாகவிருக்கும். பேடு அவ்வளவு அழகல்ல. இது முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்குங் காலம் அடை காக்கிறது. முட்டையை விற்றுப் பலர் பணம் சம்பாதிக்கின்றனர்.

வறிய மக்கள் தங்கள் சீவனத்தைச் செம்மையாக நடத்தவும், செல்வர்கள் பணஞ் சேர்க்கவும் கோழிப் பண்ணை வைக்கலாம். விரும்பினாற் கோழி வளர்ப்பை ஒரு குடிசைத் தொழிலாகக் கொள்ளலாம்.

இப்படிக் கோழிகளிலிருந்து நாம் எவ்வளவோ நன்மைகளைப் பெறக்கூடியதாயிருக்க, வருடா வருடம் நம் நாட்டில் எவ்வளவோ ஆயிரங் கோழிகள் சித்திர வதை செய்யப்படுகின்றன! எத்தனை கோழிகள் உயிரோடு வதைக்கப்படுகின்றன! எத்தனை கோழிகள் தொங்கும் கயிற்றில் தூங்குகின்றன! அநியாயம்! இது பாமரமக்கள், மதுவெறிகொண்ட மக்கள் செய்யும் பாபச்செயல்.

மத அறிவு மலிந்து, படித்துப் பட்டம் பெற்றவர்களின் ஆளுகையிலுள்ள கோயில்களில், ஒரே நாளில் ஆயிரக் கணக்கான கோழிகள் கழுத்து வேறு முண்டம் வேறாக்கப் படவில்லையா, கருத்தற்ற பலி என்னும் பித்தலாட்டத்தினால்?

பயன்தரும் கோழிகளுக்கு மனிதர்களளிக்கும் பிரதியுபகாரம் இதுதானா?

## சர்வோதய காணிக்கை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

100 மாணவர்கள் வரையில் படிப்பில்லாமல் இருக்கின்றார்கள். குரும்பசிட்டியில் 2 ஐக்கிய சங்கங்களும் ஒரு ஐக்கிய பண்டகசாலையும் உண்டு. சன்மார்க்க சபை என்ற ஒரு அருமையான ஸ்தாபனம் இக் கிராமத்தில் நல்ல ஆக்க வேலைகளைச் செய்துவருகின்றது. இச்சபையின் ஆதரவில் ஒரு முன்மாதிரியான வாசிகசாலை நூல் நிலையம் உட்பட நடத்தப்பட்டு வருகின்றது. இச் சபையைச் சிறப்புற வளர்த்தவர் ஈழகேசரியின் தந்தையான காலம்சென்ற திரு. நா. பொன்னையா அவர்களேயாவர். திரு. நா. பொன்னையா அவர்கள் மீது குரும்பசிட்டியில் உள்ள சாதாரண மக்களுக்குக்கூடப் பெரிய பக்தி இருக்கிறது. சாதாரண ஏழை மக்கள் வீடுகளில் எல்லாம் திரு. நா. பொன்னையா அவர்களது படத்தைக் கண்ணாரக் கண்டோம். திரு. நா. பொன்னையா அவர்கள் தமது கிராமமாகிய குரும்பசிட்டிக்கும் பல துறைகளிற் சேவை செய்திருக்கின்றார். இக் கிராமத்தின் போக்குவரத்துப் பாதைகளைச் சீர்திருத்துவதில் திரு. நா. பொன்னையா அவர்கள் நன்கு உழைத்திருக்கின்றார்கள் என்பதை அக் கிராமத்துள்ள கமக்காரர்களிடமிருந்து அறிந்தோம். ஏழைகள் கஷ்ட நஷ்டப்பட்டவர்களுக்கெல்லாம் ஈழகேசரிப் பொன்னையா அவர்கள் செய்த உதவிகள் இன்றும் அக் கிராம மக்களின் உள்ளங்களிற் பதிந்திருக்கின்றனவென்பது குறிப்பிடத்தக்கது.

குரும்பசிட்டியில் ஒரு அம்பாள் ஆலயமும், ஒரு பிள்ளையார் ஆலயமும் உண்டு. இங்கு சைவக் குருமாரே நித்திய நைமித்தியங்களைச் செய்கின்றார்கள். மக்கள் தெய்வ வழிபாடு உடையவர்களாகத் தெரிகிறது. இக் கிராமத்தில் புறமதத்தவர்கள் கிடையாது. ஊழியர் மூ. பொன்னையா அவர்கள் அம்பாள் ஆலயத்தில் நித்திய திருத்தொண்டு செய்துவருவதானது அக்கிராமத் தெய்வ வழிபாட்டுக்கு ஊக்கமளிக்கின்றது.

குரும்பசிட்டியில் 2 பெரியசுருட்டுத்தொழிற்சாலைகளும் மற்றும் சிலசிறிய தொழில்-நிலையங்களும் உண்டு. அங்கு பால்மணம்மாறாச் சிறுவர்களும்சுருட்டுத்தொழிலில் ஈடுபட்டிருப்பதுகண்டு வருந்துகின்றோம். ஆரம்பகல்விகூட இல்லாமல்இப்பிள்ளைகள் எதிர்காலத்தில்எவ்வளவுகஷ்டமடைவார்கள் என்பதைச் சுருட்டுத் தொழிற்சாலை முதலாளிமார்களோ தாய் தந்தையர்களோ அறியாதிருப்பது வருந்தத்தக்கது. இதற்குக் காரணம் மக்களது வறுமையேயாகும். இருந்தாலும் தாய் தந்தையர்கள் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தைப்பற்றிச் சிறிது சிந்திக்க வேண்டும். கல்வியறிவுடன் கூடிய கைத்தொழிற் பயிற்சியே நாட்டின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் சாதனமாகும்.

ஊழியர் மூ. பொன்னையா அவர்கள் தமது சுயமுயற்சியால் ஒரு நெசவுசாலையை அமைத்துள்ளார். அங்கு சில தறிகள் வேலைசெய்கின்றன. இவரது சேவையினால் அக்கிராமத்தில் சில வீடுகளிலும் நெசவுதறிகளில் வேலைசெய்வது தெரிகிறது. அக்கிராமத்தில்நெசவுப்பயிற்சி அளித்தால் பல இளம் பெண்களுக்கு அத்தொழில் ஆதரவாகஇருக்கும்.

குரும்பசிட்டியில் 80சதவீதமானோர் கமக்காரர்கள். புகையிலை, வெண்காயம் முதலிய வியாபாரப் பொருட்களை உற்பத்தி செய்வதிலேயே ஊக்கம் காணப்படுகின்றது. உணவுத் தானியங்களை உற்பத்தி செய்தால் வறுமை குறையும். இதைப்பற்றி ஒரு இடத்தில் கமக்காரர்களுக்கு வற்புறுத்தினோம். கூடுதலான ஆசிரியர்களும் சில அரசாங்க உத்தியோகஸ்தர்களும் இவ்வூரில் உண்டு. கிராம மக்களில் 65 சத வீதமானோருக்கு எழுத வாசிக்கத் தெரியும். சில ஏழைகள் அரசாங்க உதவிப் பணம் பெற முடியாமல் கஷ்டப்படுகின்றார்கள். கிராமத் தலைவரும் சன்மார்க்கசபையும் இந்த விஷயத்தில் ஊக்கம்எடுப்பது நல்லது.

சர்வோதய காணிக்கை சேகரிப்பதில் குரும்பசிட்டியில் பேராதரவு கிடைத்தது. ஏழைமக்கள், கமக்காரர்களே எதிர்பார்க்காத அளவுக்குப் போதரவளித்தனர்,

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா:
இலங்கை-இந்தியா ரூ. 6-00
மலாயா — $ 6-00
தனிப் பிரதி சதம் 10. காசு 10

T'Phone No. 805

The
EeLAKESARI
NATIONALIST TAMIL WEEKLY
Largest circulation in Ceylon, India, Burma & Malayan Union
Founder: N· PONNIAH

Vol. 22 | Chunnakam, Sunday, March 2, 1952 | No. 33

## நாலும் நாற்கயிறும்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தனக்குத் தலையிடி என்று படத்திற்குவரமறுத்துவிட்டாள். வீட்டிலும் ஆட்களில்லை என்று அவர்கள் தெண்டியாது விட்டுவிட்டனர். இப்படியான ஒரு சந்தர்ப்பத்தையே வேலைக்கார இராமசாமியும் எதிர் நோக்கியிருந்தான்.

பென்ஷனியர் செல்லப்பாவின் பெட்டிக்குள் இருக்கும் உரொக்கப்பணத்தைத் திருடிக்கொண்டு ஓடிவிட அவன் திட்டம் போட்டான். எப்போது அன்றைய இரவு வரப்போகிறதென்று இராமசாமி நிமிஷங்களையும் எண்ணிக் கொண்டிருந்தான்.

பஞ்சகல்யாணியோ அன்றைய இரவு வரக்கூடாதென்று எண்ணிக்கொண்டிருந்தாள். அவளுக்குத் தங்காராஜனோடு ஓடிவிடவும் விருப்பமில்லை. நாற்கயிற்றிலே தூங்கவும் விருப்பமில்லை. ஆனால் இரண்டில் ஒன்றை அவள் அன்று செய்தாகவேண்டும்.

இவ்வளவு பிரச்சினைகளையும் வைத்துவிட்டுச் சூரியன் மேற்கே அஸ்தமித்தான். பகலில் போடுகிற திட்டங்கள் இரவில் சரிவருவதுமில்லை. இரவில் போடுகிற திட்டங்கள் பகலில் சரிவருவதுமில்லை. இது பொதுவான வழக்கம்.

திட்டமே போடாமல் காரியங்கள் செய்கிற, அழகுசுப்பர் என்னும் அதிசய புருடன் பனங்கள்ளினால் குடிக்கப்பட்டவராகப் பென்ஷனியர் செல்லப்பாவின் வீட்டு ஒழுங்கையால் சென்றார். நாய்க்கு மோப்பந் தெரிவதுபோலவும், புலிக்கு மானினத்தின் மெல்லிய சத்தமும் புரிந்துவிடுவது போலவும், பென்ஷனியர் செல்லப்பாவின் வளவுக்குள் கேட்ட ஒரு ஒலியைக்கேட்டு அதைத் தனதுடைமையாக்கும் நோக்கோடு ஏற்றசந்தர்ப்பத்தை எதிர்நோக்கி அழகுசுப்பர் காவல் மரத்தில் ஏறிக் கொண்டார்.

அதே காவல் மரத்தில் ஏறுவதற்காக மறைந்து மறைந்து வந்த இன்னொரு உருவம் தனது திட்டத்தை மாற்ற வேண்டி நேரிட்டதோடு, அழகுசுப்பர் காவல்மரத்தில் ஏறும் பொருள் தெரியாது மயங்கவேண்டியும் ஏற்பட்டது.

—அடுத்த இதழில் முடியும்

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

## தேசிய சேமிப்பு இயக்கம்

### யாழ்ப்பாணப் பாடசாலைகள் ஆர்வம்

சேர் ஐவர் ஜென்னிங்ஸ் பாடசாலைகள் சேமிப்புக் கொடிப் போட்டி இலங்கையிலுள்ள தமிழ், சிங்கள ஆங்கிலப்பாடசாலைகளில் நடைபெற்றது. யாழ்ப்பாணத்திலுள்ள இரு பாடசாலைகள் முதலாம், இரண்டாம் ஸ்தானங்களைப் பெற்றுள்ளன.

1. யாழ்ப்பாணம் தெல்லிப்பழை கிழக்குத் தமிழ்க்கலவன் பாடசாலை.

2. அச்சுவேலி, கொட்டகப்புலம் ஸ்ரீமன் கத்தோலிக்க தமிழ்ப்பாடசாலை.

3. ருவான்வெல கன்னத்தோட்டை அரசினர் தமிழ்ப்பாடசாலை.

முதலாம் தவணையின் போதும் 1-ம் 3-ம் ஸ்தானங்களை யாழ்ப்பாணப் பாடசாலைகளே பெற்றன. யாழ்ப்பாணப்பகுதியிலே தேசிய சேமிப்பு இயக்க மேற்பார்வையாளராகத் திரு. செ. தனபாலசிங்கம் பணியாற்றுகின்றார்.

## பழமொழி இலக்கியம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வகை. பொதுசனங்களின் பேச்சு வழக்கில் மட்டும் உலாவிவருவன மற்றவகை:

பழமொழி நானூறு என்பது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. அதை இயற்றியவர் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த சமணப் பெரும் புலவருள் ஒருவரான முன்றுறையரையனார் என்பவர். தமிழ் நாட்டில் அக்காலத்து வழங்கிய சிறந்த நானூறு பழமொழிகளைத் திரட்டி ஒவ்வொரு பழமொழியைக் கொண்டும் ஒவ்வொரு உண்மையை விளக்கும் வெண்பா நூலாக அதை அமைத்துள்ளார்.

"பிண்டியின் நீழற்
பெருமான் அடிவணங்கிப்
பண்டைப் பழமொழி
நானூறும்–கொண்டினிதா
முன்றுறை மன்னன் நான்
கடியுஞ் செய்தமைத்தான்
இன்றுறை வெண்பா இவை"

என்று அந்நூலில் வரும் தற்சிறப்புப்பாயிரமே இதை விளக்கும்.

பழமொழிகளை மனத்துட்கொண்டு, அவற்றால் விளக்குதற்கேற்ற சிறந்த கருத்துக்களுடன் அவற்றைத் தொடர்பு படுத்துந் தன்மையில் நூல் அமைந்தமையால், அந்நூற் பாடல்கள் ஒவ்வொன்றுந் தனிநிலைபெற்று நின்றன. படிப்போரின் வசதிக்காகப் பொருட் பொருத்த முள்ள பாடல்களைத் தாம்பிரித்துப் பால் இயல் வகுத்தவர் திருமணம் செல்வக்கேசவராயர் என்பவர்.

பழமொழி நானூறு என்ற நூலுக்குப் பழைய பொழிப்புரை ஒன்றும் உண்டு. அட்டாவதானம் சுப்பராயச் செட்டியார் சிற்சில பாடல்களுக்கும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் முதலிருநூறு பாடல்களுக்கும் உரை எழுதிப் பதித்த பதிப்புக்களும் இதற்குண்டு. புலவர் இராசமாணிக்கம்பிள்ளை என்பவர் எழுதிய உரையுடன் சென்னை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகமும் இதற்கு ஒரு பதிப்பை வெளியிட்டிருக்கிறது.

செய்யுள் செய்யும் வசதிக்காகப் பல பழமொழிகள் இந்நூலாசிரியரால் உருமாற்றம் பெற்றுள்ளன என்பதையும் நினைவில் வைத்து நூலைக் கற்கவேண்டும். (தொடரும்)

## சிவானந்த வித்தியாலயத்தில் சிவராத்திரி

சிவானந்த வித்தியாலயத்தில் சிவராத்திரி மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அருட்டிரு. நடராஜானந்த அடிகள் பூசையை நடாத்தினார்கள். இரவு முழுவதும் இசைத்தட்டுச் சங்கீதமும் மாணவர்களின் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

### மகாசிவராத்திரி 29-ம் வருடவிழா

தென்கோவை வீரபத்திரேஸ்வரர் கோவிலில் கடந்த சனிக்கிழமை (23-2-52) யிரவு 6 மணி தொடக்கம் நவோத்தரசத சங்காபிஷேகம், திருவிழா, விரிவுரைகள் என்பன நடைபெற்றன.

—நிருபர்.

## சைவவித்தியாவிருத்திச் சங்க ஆசிரியர் சங்கம்

இச்சங்கத்தின் 11-ம் ஆண்டு நிறைவுவிழா 27-1-52ல் திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. சங்க உபதலைவர்: திரு. ம. வைத்தியலிங்கம் அவர்கள் தலைமை தாங்கினர். வடபெரும்பாக வித்தியாதிகாரி திரு. கே. கிருஷ்ணபிள்ளை பி. ஏ. அவர்கள் "சமயபாடம்" என்னும் பொருள்பற்றி விரிவுரையாற்றினார்கள். இதையொட்டிச் சைவவித்தியா விருத்திச் சங்கச் செயலாளர் திரு. சு. இராசரத்தினம் அவர்கள் சிறந்த குறிப்புக்களைக் கூறினார்கள். அடுத்த ஆண்டுக்குப் பின்வருவோர் உத்தியோகத்தராகத் தெரியப்பட்டனர். தலைவர்: திரு. ம. வைத்தியலிங்கம், காரியதரிசி: திரு. சி. சதாசிவம்பிள்ளை, உபகாரியதரிசி: பண்டிதர் திரு. கா. நமசிவாயம், தனாதிகாரி: திரு. என். பொன்னம்பலம். நிர்வாகசபைக்கு 13 பேர் தெரியப்பட்டனர்.

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA

*Testamentary Jurisdiction* } No. 1409

In the matter of the estate of the late Nagamuttu wife of Vallipuram of Chunnakam.

*Deceased*

Murugan Ponniah of Chunnakam *Petitioner*

1. Vaitty Vallipuram, 2. Ampalavy Muttan, 3. Packiam widow of Poothapillai, 4. Murugan Kandiah, 5, Kathiran. Muttan, 6. and wife Thangal. 7. Seeny Velautham, 8. Ponnan Kandiah, 9. and wife, Nallapillai, 10. Valli Kandiah, 11. and wife Eliapillai, 12. Seeny Raman, 13. Seeny Sabapathy, 14. Sithampary Alvan. 15. Achchimuttu widow of Aiyan Kathirkamu, Minor, 16. Nallathamby Sivagnanalingam, G. A. L. 17. Eliapillai widow of Nallathamby, 18. Nagamuttu wife of Nagan, 19. Theivanai widow of Kathirkamu, 20. Kathiran Nagan, 21. and wife Rasammah, 22. Muttan Arunasalam, 23. and wife Manonmany, 24. Vallipuram Rasiah, Minor 25. Sivamany daughter of Vallipuram, G. A. L. 26. Kanthan Vallipuram all of Ghunnakam.

*Respondents*

This matter coming on for disposal before K. D. de Silva, Esquire, District Judge, Jaffna, on the 24th day of January, 1952, in the presence of Mr., T. Kumaraswamy, Proctor, on the part of the petitioner above named and the affidavit of the petitioner dated 21st January 1952, having been read.

It is ordered that the 17th respondent above-named be appointed guardian ad litem of the 16th respondent above-named and the 26th respondent abovenamed appointed guardian ad litem of the 15th respondent abovenamed and that the petitioner as one of the heirs to the estate of the deceased deelared entitled to have Letters of Administration to the estate issued to him, unless the respondents abovenamed or any other person or persons interested shall on or before the 24th day of March, 1952, show sufficient cause to the satisfaction of this court to the contrary.

It is further ordered that the 17th and 26th resdondents do produce the said minors in court on the said date.

This 12th day of February, 1952

(Sgd.) K. D. de Silva
District Judge.

[4551]




இப்பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம்—குரும்பசிட்டி, முத்தையா—சுபாரத்தினம் அவர்களால் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் 1952-ம் ஆண்டு மார்ச் மீ 2-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது